# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் தோற்றம்

–முனைவர் மணிமேகலை புஷ்பராஜ்

ஒரு நாள் சென்னை சட்டக் கல்லூரி இயக்குநராகப் பணியாற்றிய பேராசிரியர் பழனிசாமி அவர்கள், கோவை செழியன் அவர்களைத் தொலைப்பேசியில் அழைத்து, " நமது இனத்தைச் சேர்ந்த கே. பழனிசாமி என்பவர் சென்னைத் தலைமைச் செயலகத்தில் நிதித்துறையில் பணியாற்றி வருகிறார். மேட்டூரைச் அடுத்த குளத்தூர்வாசியான அவர் சென்னை மைலாப்பூரில் வசித்து வருகிறார்.

அவருடைய குழந்தைக்குப் பெரியம்மை தாக்கி, குழந்தை மரணம் அடைந்துவிட்டது. அவருக்கு உதவ பக்கத்து வீட்டுக்காரர்களும், அருகில் குடியிருந்தவர்களும் முன்வரவில்லை. உடலை அடக்கம் செய்யவும் , ஆறுதல் கூறவும் யாரும் வரவில்லை" என்று கூறினார். இந்தத் தகவலை மூத்த வழக்கறிஞர் இரா. காந்தி அவர்களிடமும் பேராசிரியர் பழனிசாமி கூறினார். காந்தி அவர்கள் சில கொங்குச் சமுதாய நண்பர்களுக்குத் தொலைபேசி மூலம் தகவல் சொல்லி அவர்களை நேரே மைலாப்பூரில் இருந்த பழனிசாமி இல்லத்திற்கு வரச் சொன்னார்.

சிறிது நேரத்தில் பேராசிரியர் பழனிசாமி ,திருமதி கமலா செழியன், கோவை செழியன், இரா. காந்தி, கே.எம், சென்னியப்பன் மற்றும் சில கொங்குச் சமுதாய நண்பர்கள் மைலாப்பூர் சென்று, பழனிசாமி அவர்களுக்கு ஆறுதல் கூறியதுடன், இறந்த அவரது குழந்தையின் உடலை அடக்கம் செய்திடத் தேவையான அனைத்து உதவிகளையும் முன்னின்று செய்தனர்.

சென்னையில் கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு குடும்பத்திற்கு ஏற்பட்ட இந்த ஆதரவற்ற நிலை, அத்துயர நிகழ்ச்சியில் பங்கேற்ற கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த நண்பர்களுக்கு பெருத்த வருத்தத்தையும் தாக்கத்தையும் உண்டாக்கியது. இந்தச் சம்பவம் நடந்தது 1960 ஆம் ஆண்டு இறுதிவாக்கில் ஆகும்.

இதுபோலவே 1961 ஆம் ஆண்டு ஆரம்பத்தில் சென்னை விமான நிலையத்தில் பணிபுரிந்த ஒரு கொங்குச் சமுதாய நண்பரின் தங்கை திடீரென மரணமடைந்துவிட்டார். அந்த நண்பரின் வீடு சென்னை எழும்பூரில் ஒரு குடியிருப்பு

வளாகத்தில் இருந்தது. நெருங்கிய நண்பர்கள் போல் பழகி வந்த அந்த வளாகத்தைச் சேர்ந்தவர்களில் ஒருவர் கூட உதவ முன் வரவில்லை. அந்தச் சமயத்தில், அந்த வளாகத்தில் வசித்துவந்த கே.எம். சென்னியப்பன் மட்டும்தான் ஈமச் சடங்குகள் நடைபெற அனைத்து உதவிகளையும் செய்தார்.

**1961** ஆம் ஆண்டு சென்னையில் தமிழக அரசின் தலைமைச் செயலகத்தில் பணியாற்றி வந்த கொங்குச் சமுதாய நண்பர்கள் ஒன்று சேர்ந்து ‘Friends Association’ என்ற அமைப்பைத் தொடங்கினர். இந்த அமைப்பின் முதல் கூட்டம் **1961** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தலைமைச் செயலகத்தின் வளாகத்தில் அமைந்திருந்த தர்பார் ஹோட்டலில் நடந்தது. இக் கூட்டத்தில் கே.எம். சென்னியப்பன், கே.பி. சுப்பிரமணியம், சி.கே. இராமசாமி , கே.ஏ. சுப்பிரமணியம், கே. பழனிசாமி ,சி.எம். இராமசாமி, கே.ஏ. ஸ்ரீதேவியப்பன், சி. ஈஸ்வரமூர்த்தி ஆகிய **9** பேர் கலந்து கொண்டனர்.

ஒவ்வொரு உறுப்பினரிடமும் ரூ **2** சந்தாவாக வசூலிக்கப்பட்டது. வசூலான ரூ**18** கே. பழனிசாமி அவர்களிடம் பத்திரமாக வைத்துக் கொள்ள கொடுக்கப்பட்டது. மாதத்திற்கு ஒரு முறை கூடுவது என்றும் , கூடுமானவரை மாதச் சம்பள நாளுக்கு அடுத்து வரும் வேலை நாளில் கூடுவது என்றும் முடிவெடுக்கப்பட்டது. முதல் கூட்டத்தில் காபி, பலகாரத்திற்கான செலவை கே. எம். சென்னியப்பன் ஏற்றுக் கொண்டார்.

Friends Association அமைப்பின் இரண்டாவது கூட்டமும் **1961** ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் ஹோட்டல் தர்பாரில் நடைபெற்றது. பொதுவான மற்றும் தேவையான விஷயங்கள் குறித்து கலந்துரையாடல்கள் நடைபெற்றன. அமைப்பின் **9** உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். காபி, பலகாரச் செலவை கே,பி. சுப்பிரமணியம் ஏற்றுக் கொண்டார்.

**1961** ஆம் ஆண்டு செப்டம்பர் மற்றும் அக்டோபர் மாதங்களில் தவிர்க்க முடியாத காரணங்களினால் கூட்டம் ஏதும் நடத்தப் படவில்லை, சி.கே. இராமசாமி மற்றும் கே. எம். சென்னியப்பன் வெளியூர் பயணம் சென்றிருந்ததும் ஒரு காரணம்.

**1961** ஆம் ஆண்டு நவம்பர் மாதம் , இரண்டாம் தேதி , அமைப்பின் மூன்றாம் கூட்டம் நடந்தது. ஐ.எல்.சி துறையைச் சேர்ந்த நடராஜன் இக் கூட்டத்தில் கலந்து கொண்டார். அவரை **10**வது உறுப்பினராக சேர்த்துக் கொண்டனர். கே.எம்.

சென்னியப்பன் மற்றும் சி.கே. இராசாமி ஆகிய இருவரும் தங்களுடைய வெளியூர் சுற்றுப் பயண அனுபவங்களை இக் கூட்டத்தில் விளக்கமாக எடுத்துரைத்தனர். காபி, பலகாரச் செலவை கே. பழனிசாமி ஏற்றுக் கொண்டார்.

நண்பர்கள் சங்கத்தின் நான்காவது கூட்டம் **2–12–1961** அன்று ஹோட்டல் தர்பாரில் நடைபெற்றது. கே. ஏ. ஸ்ரீ தேவியப்பன் தவிர மற்ற **9** உறுப்பினர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர். வீடு கட்டும் சங்கங்களில் சேர்வது உள்பட பல்வேறு விஷயங்களைப் பற்றி கூட்டத்தில் பேசினர். காபி, பலகாரச் செலவை சி.கே.இராமசாமி ஏற்றுக் கொண்டார்.

சங்கத்தின் ஐந்தாவது கூட்டம் **2–1–1962** அன்று நடைபெற்றது சி. ஈஸ்வரமூர்த்தி தவிர மற்ற **9** உறுப்பினர்களும் கூட்டத்தில் கலந்து கொண்டனர். **14–1–1962** அன்று பொங்கல் திருநாளில் சென்னை மெரினா கடற்கரையில் குடும்பத்துடன், கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த மற்ற நண்பர்களுடன் கூடுவது என்று இக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. கூட்டத்திற்கான காபி, பலகாரச் செலவை கே. ஏ. சுப்பிரமணியம் ஏற்றுப் கொண்டார்.

**14–1–1962** பொங்கல் திருநாளில் மாலை **4.30** மணிக்கு நண்பர்கள் சங்க உறுப்பினர்கள் அனைவரும், சதாசிவம் மற்றும் நடராஜன் ஆகியோரைத் தவிர, மெரினா கடற்கரையில் குடும்பத்துடன் குழுமினார்கள். புதிதாக சி.எம். வெங்கடாசலம் **(S.I)** , பி.கே. கந்தசாமி , பொறியாளர் பெரியசாமி, மாநிலக் கல்லூரி மாணவர் மாரிசாமி ஆகியோரும் கலந்து கொண்டனர். இந்த இனிய, சிறப்புமிக்க குடும்ப நிகழ்ச்சிக்கு கே.பழனிசாமி ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இந்த நிகழ்ச்சிக்கு ரூ **20** செலவிடப்பட்டது.

**1961** ஆம் ஆண்டு நடந்த கூட்டங்களில் நடந்த விவாதங்களில், தலைமைச் செயலகப் பணியாளர்கள் மட்டுமல்லாமல் சென்னையில் உள்ள மற்ற கொங்குச் சமுதாய நண்பர்களையும் ஒருங்கிணைத்து, ஓர் அமைப்பைத் தொடங்க வேண்டும் என்று ஆலோசித்தனர். Friends Association அமைப்பில் இருந்த கே.எம். சென்னியப்பன் உள்ளிட்ட **10** பேரும், அக்கால கட்டத்தில் சென்னை மாநகரில் கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்களாக விளங்கிய கோவை செழியன், பேராசிரியர் பழனிசாமி, வழக்கறிஞர் இரா. காந்தி ஆகியோரைச் சந்தித்து,

தங்களுடைய எண்ணங்களைத் தெரிவித்தனர். இரண்டு கொங்குச் சமுதாயக் குடும்பங்பளுக்கு சென்னையில் ஏற்பட்ட துயரக் சம்பவங்களும், சரியான உதவி கிடைக்காத அனுபவங்களும் இந்தச் சந்திப்பில் முக்கியமாகப் பேசப்பட்டன.

இதன் தொடர்ச்சியாக கோவை செழியன், பேராசிரியர் பழனிசாமி, இரா. காந்தி, கே.எம்.சென்னியப்பன், சி.கே. இராமசாமி, ஏ.எம். இராஜா, காங்கயம் இராமசாமி, தேவணன், மீசை பெருமாள், டி.பி. சதாசிவம், கே.பி.சுப்பிரமணியம், கே.ஏ.சுப்பிரமணியம், கே.பழனிசாமி, சி.எம்.இராமசாமி, கே.ஏ.ஸ்ரீ தேவியப்பன், சி.ஈஸ்வரமூர்த்தி, நடராஜன், பி.டி.சி.மாரப்பன், சண்முகம் முதலானோர் ஒன்று கூடி சென்னையில் குடியிருக்கும் கொங்குச் சமுதாய நண்பர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, கொங்குச் சமுதாயத்திற்கென்று சென்னையில் ஒரு சங்கம் அமைப்பது என்று முடிவெடுத்தனர். அப்படி **1961** ஆம் ஆண்டு பிற்பகுதியில் தொடங்கப்பட்டது தான் சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்.

அமைப்பில் பெருமளவில் அரசு ஊழியர்கள் இருந்ததால் அரசுப்பணியில் ஏதும் சிக்கல் வரக் கூடாது என்பதைக் கருத்தில் கொண்டு சென்னை கொங்கு வேளாளர் சங்கம் என்று முதலில் ஆலோசிக்கப்பட்ட பெயர் வைக்காமல், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் என அமைப்புக்குப் பெயர் சூட்டப்பட்டது.

சங்கத்தின் துணைத் தலைவராக பேராசிரியர் பழனிசாமி அவர்களும், பொருளாளராக கோவை செழியன் அவர்களும், செயலாளராக கே.எம்.சென்னியப்பன் அவர்களும்,இணைச் செயலாளராக இரா.காந்தி அவர்களும், துணைப் பொருளாளராக தேவணன் அவர்களும், பொறுப்பேற்றனர். சங்கத்தின் விதிகள் வகுக்கப்பட்டு , **1961** ஆம் ஆண்டு இறுதி முதல் சங்கம் செயல்படத் தொடங்கியது.

சங்கக் கூட்டங்கள் மாதம் ஒரு முறை திருவல்லிக்கேணியில் மாரப்பன் அவர்களுக்குச் சொந்தமான மாரா நர்சரி பள்ளி மற்றும் பி.டி.சி.டுடோரியல் கல்லூரி வளாகத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் நடைபெற்று வந்தன. தலைவர் பதவி காலியாகவே வைக்கப்பட்டிருந்தது. சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் முதல் தலைவராக **1968** ஆம் ஆண்டு அருட்செல்வர் நா.மகாலிங்கம் அவர்கள் பொறுப்பேற்றார். அப்போது கே.எம். சென்னியப்பன் செயலாளராகவும், தேவணன் பொருளாளராகவும் இருந்தனர்.

சிறிது காலத்திற்குப் பிறகு மைலாப்பூர் வடக்கு மாட வீதியில் இருந்த பட்டக்காரர் சேனாதிபதி கவுண்டர் இல்லத்தில் சங்கக் கூட்டங்கள் நடந்தன. அப்பொழுதெல்லாம் மாதம் ரூபாய் ஐந்துதான் சந்தாவாக வசூலிக்கப்பட்டது.

சங்கத்தின் சார்பில் சிட்பண்ட் நடத்தப்பட்டது. மாமல்லபுரம், பூண்டி ஏரி, காஞ்சிபுரம், வேடந்தாங்கள், ஆந்திர மாநிலத்திலுள்ள கோனார் நீர் வீழ்ச்சி போன்ற சுற்றுலாத் தலங்களுக்கு சங்கத்தின் சார்பில் சுற்றுலாக்கள் ஏற்பாடு செய்யப்பட்டு, சங்க உறுப்பினர்கள் குடும்பத்துடன் உற்சாகமாகவும், மகிழ்ச்சியாகவும் கலந்து கொண்டனர். ஆண்டுக்கு இரண்டு முறை இராயப்பேட்டை உட்லண்ட்ஸ் ஹோட்டலில் சிற்றுண்டியோடு குடும்ப விழா கூட்டங்கள் நடந்தன.

ஆரம்பக் காலத்தில் கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த, சென்னை மற்றும் அதன் புறநகர்வாசிகள் நலனுக்காகத்தான் சங்கம் தொடங்கப்பட்டது. சில ஆண்டுகளுக்குப் பின்னர் பிற மாவட்டங்களில் உள்ள கொங்குச் சமுதாயத்தினர், இச் சங்கத்தில் உறுப்பினராக ஆர்வமும், அக்கறையும் காட்டியதால், சங்க விதிகள் திருத்தப்பட்டு, கொங்குச் சமுதாயத்தைச் சேர்ந்த யார் வேண்டுமானாலும் அங்கத்தினராகலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அதன் பலனாக இன்றைய தினம் **3743** உறுப்பினர்கள் கொண்ட சங்கமாக வளர்ந்துள்ளது.

சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் சேவைகள் பல செய்து, சாதனைகள் பல முடித்துள்ளது. கொங்கு நாடு இல்லம், வெள்ளி விழா இல்லம், தீரன் சின்ன மலை மாளிகை, சாதனையாளர்களுக்கு கொங்கு மாமேதை, கொங்கு மாமணி, கொங்கு சாதனையாளர், கொங்கு இளம் சாதனையாளர், கொங்கு வேளாண் சாதனையாளர் ஆகிய விருதுகள் குடும்ப விழாவில் ஆண்டுதோறும் வழங்குதல், குடும்ப விழாவில் கலை நிகழ்ச்சிகள், சுவையான விருந்து, சான்றோர்களின் அரிய சொற்பொழிவுகள், மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்குதல் போன்றவை இடம் பெறுதல், தீரன் சின்னமலை திருவுருவச் சிலைக்கு பிறந்த நாள் மற்றும் நினைவு நாளில் மரியாதை செய்தல், திருமண மையம், இலவச செய்தி மடல், வேலை வாய்ப்பு முகாம், மருத்துவ முகாம், பொறியியல் கல்லூரிகளில் இலவச இடங்கள், மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்குதல், குழந்தைகள் மற்றும் பெண்களுக்கு விளையாட்டுப்போட்டி, மாணவர்களுக்கு கவிதை, பேச்சு, கட்டுரைப் போட்டிகள் முதலியன நடத்தி பரிசுகள் வழங்குதல் போன்றவை சில சாதனைகளாகும்.

சங்கத்திற்கு 1961 ஆம் ஆண்டு முதல் பொறுப்பேற்றிருந்த தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் பின்வருமாறு :

| ஆண்டு | தலைவர் | செயலாளர் |
|---|---|---|
| 1961–67 | பேராசிரியர் பழனிசாமி (துணைத் தலைவர் மற்றும் தலைவர் பொறுப்பு) | காங்கேயம் இராமசாமி, மீசை பெருமாள் மற்றும் கே.எம் சென்னியப்பன் |
| 1968–77 | அருட்செல்வர் நா. மகாலிங்கம் | கே.எம்.சென்னியப்பன் மற்றும் டாக்டர் கே.கே.லட்சுமணன் |
| 1978–82 | மூத்த வழக்கறிஞர் இரா.காந்தி (துணைத் தலைவர் மற்றும் தலைவர் பொறுப்பு) கே.பழனியப்பன் (துணைத் தலைவர் மற்றும் தலைவர் பொறுப்பு) | கே.எஸ். கோவிந்தசாமி |
| 1983–89 | சி. முத்துசாமி ஐ.ஏ.எஸ் (ஓய்வு) | டாக்டர் கே.எஸ்.கே.வேலுமணி |
| 1990–92 | டாக்டர் எம்.ஏ.வேலுசாமி கே.பொன்னுசாமி | டி.கே.சுப்பிரமணியன் |
| 1993–96 | எஸ். அருணாசலம் மற்றும் இரமடா பி.தேவராஜன் | கே.பாலசுப்பிரமணியன் |
| 1997–2000 | கே.ஆர்.அப்பாவு | கே.சி.காளியண்ணன் |
| 2001–2004 | என்.நல்ல கோவிந்தசாமி கே.சி.காளியண்ணன் | ஈ.ஆர்.ஈஸ்வரன் |
| 2004–2006 | கே.பாலசுப்பிரமணியன் | கே.ஆர்.பி.மோகன் |
| 2006–2010 ஜனவரி வரை | கே.ஆர்.பி.மோகன் | பரணி கே.பாலசுப்பிரமணி |
| ஜனவரி 2010 முதல்–செப்டம்பர் 2010 வரை | பி. சென்னியப்பன் | பரணி. கே.பாலப்பிரமணி |
| 26–9–2010 முதல் | பரணி கே.பாலசுப்பிரமணி | ஆர். செல்வராஜ் |

**1961** ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம், **50** ஆவது ஆண்டில் வீறு நடைபோட்டு நடந்து வருகிறது. அனைத்து கொங்குச் சமுதாய அமைப்புகளுக்கும் தாயகமாகத் திகழும் இச் சங்கம் கட்சி சார்பற்றது. சங்கத்தின் மூன்று மாளிகைகளிலும் தங்கிப் பயன்பெற்ற, பெற்றுவருகின்ற பெண்களும், இளைஞர்களும் ஏராளம் . கொங்குச் சமுதாயத்திற்கு சேவை புரிய, தொண்டாற்ற, ஏழை மாணவர்களுக்கு கல்வி ஊக்கத் தொகை, கல்வி உதவித் தொகை வழங்கிட சங்கத்தின் நிதி நிலைமையை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வந்திட அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

சங்க வளர்ச்சிக்கு முக்கியக் காரணமாக விளங்குபவர்கள், **1961** ஆம் ஆண்டு முதல் பல்வேறு பொறுப்புகளில் பணியாற்றியவர்கள், சங்கத்திற்கு நிதியை வாரி வழங்கியும், வசூலித்தும் கொடுத்த கொங்குக் கொடையாளர்கள், கொங்குநாடு இல்லம், வெள்ளிவிழா இல்லம், தீரன் சின்னமலை மாளிகை ஆகிய மூன்று முத்தான மாளிகைகளை உருவாக்குவதற்கு திட்டமிட்டவர்கள், இடம் வாங்க அலைந்து திரிந்துபாடுபட்டவர்கள், வடிவமைத்தவர்கள், கட்டிடங்கள் கட்டியவர்கள், கலைநிகழ்ச்சிகள் நடத்தி நிதி வசூல்செய்து கொடுத்தவர்கள், நிதி நன்கொடை அளித்தவர்கள், இரவு பகல் என்று அயராது உழைத்தவர்கள், தடைகளைக் கடக்க உதவியவர்கள், ஆண்டு விழா மலர்களுக்கு விளம்பரங்கள் தந்துள்ள பெருந்தகையாளர்கள் மற்றும் நிறுவனங்கள், எந்தப்பொறுப்பிலும் இல்லாவிடினும் தாமாகவே முன்வந்து சங்கத்திற்காக பாடுபட்ட, பாடுபட்டுவரும் நல்ல நெஞ்சங்கள் முதலானோர்க்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் என்றும் கடமைப்பட்டுள்ளது.

❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

கொங்கு மாமணி விருது வழங்கி கௌரவிக்கப்பட்ட சான்றோர்கள்

**2001 ஆம் ஆண்டு**

1. தெய்வத்திரு.கே.எம்.சென்னியப்பன்
2. டாக்டர் பழனி ஜி.பெரியசாமி
3. திரு. ஜெம். ஆர். வீரமணி

**2002 ஆம் ஆண்டு**

4. திரு. எஸ்.வி.பாலசுப்பிரமணியம்
5. திரு. ஆர்.காந்தி

**2003 ஆம் ஆண்டு**

6. திரு. டி.ஆர்.கார்த்திகேயன், I.P.S. (Retd.)
7. திருச்சி ஆர். தேவராஜன்
8. திரு. ஜி.ஆர்.சுந்தரவடிவேல்

**2004 ஆம் ஆண்டு**

9. முனைவர் சிலம்பொலி சு.செல்லப்பன்
10. டாக்டர் சி.பழனிவேலு
11. டாக்டர் பி.கே.கிருஷ்ணராஜ் வாணவராயர்

**2005 ஆம் ஆண்டு**

12. NSIT திரு. எம்.முருகேசன்
13. திரு. கே.பழனியப்பன்
14. திரு.சி.கே.இராமசாமி

**2006 ஆம் ஆண்டு**

15. திரு.நல்ல கோவிந்தசாமி
16. சக்திமசாலா திரு.பி.சி.துரைசாமி
17. திரு. வி.கே.தங்கவேல்

“கொங்குமாமேதை விருது பெற்றவர்

அருட்செல்வர் டாக்டர் நா.மகாலிங்கம்

**2007 ஆம் ஆண்டு**

18. புலவர் செ.இராசு
19. திரு. பெஸ்ட் எஸ்.இராமசாமி
20. பத்மஸ்ரீ டாக்டர் க.ரா.பழனிசாமி

**2008 ஆம் ஆண்டு**

21. ஆடிட்டர் மு.பாலசுப்பிரமணியம்
22. டாக்டர் என்.எம்.வீரய்யன்
23. தெய்வத்திரு. ப.செங்கோடன்

**2009 ஆம் ஆண்டு**

24. டாக்டர் வி.எஸ்.நடராஜன்
25. சொல்லேர் உழவன் திரு. கே.செல்லமுத்து
26. பத்மஸ்ரீ ஏ.சக்திவேல்

❖❖❖❖❖

# கொங்கு மாமணி



## திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து

அட்லஸ் திரு. நாச்சிமுத்து அவர்கள் 1944ம் ஆண்டு திரு. மாரப்ப கவுண்டர் – திருமதி நல்லம்மாள் தம்பதியருக்கு மகனாகப்பிறந்தவர். கரூரிலிருந்து 15 கி.மீ. தொலைவில் உள்ள மருதம்பட்டி என்ற குக்கிராமத்தில் பிறந்தவர். அவர் எட்டாம் வகுப்பு வரை கிராம அரசுப்பள்ளியிலும், 10ம் வகுப்புவரை கரூர் அரசுப் பள்ளியிலும் பயின்று, 1965ம் ஆண்டு பொள்ளாச்சி நாச்சிமுத்து பாலிடெக்னிக் கல்லூரியில் மெக்கானிக்கல் இன்ஜினியரிங் பட்டயப்படிப்பு முடித்தார். அதே ஆண்டு கரூரில் சிறிய அளவில் எலக்ட்ரிக்கல் ஸ்டோர் ஆரம்பித்து, பத்து வருடங்களுக்குப் பிறகு, 1975 ஆம் ஆண்டு ஜவுளி ஏற்றுமதித் தொழிலை ஆரம்பித்தார்.

1970 ஆம் ஆண்டு திருமதி கஸ்தூரி அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றுக்கொண்டார். இவர்களுக்கு எஸ்.சுகந்தி என்ற மகளும், என்.செந்தில்பிரசாத் என்ற மகனும் உள்ளனர்.இவரது மாப்பிள்ளை சபரி இண்டர்நேஷனல் திரு.எஸ்.சுசீந்திரன் 2006 ஆம் ஆண்டு கொங்கு சாதனையாளர் விருது பெற்றவராவார்.

அன்னார் அவர்கள் வாழ்க்கையில் வெற்றியடையக்காரணம் ஆழ்ந்த சிந்தனை, முயற்சி, இடைவிடாத கடின உழைப்பு, நேர்மை, ஒழுக்கம், எளிமை, தேவையான அன்பு, அரவணைப்பு கலந்த கண்டிப்பு, நம்பிக்கை, உதவும் மனப்பான்மை, கடமையைத் கண்ணெனப் போற்றுதல், காலந்தவறாமை, மனித உறவுகளைப் பேணுகின்ற மாண்பு போன்றவை ஆகும். 1975 ல் துவங்கப்பட்டஇவருடைய நிறுவனம் கரூரில் உள்ள பெரிய ஜவுளி ஏற்றுமதி நிறுவனங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது.

1994லிருந்து 2009 ஆம் ஆண்டு வரை கரூர் ஜவுளி உற்பத்தி மற்றும் எற்றுமதியாளர்கள் சங்கத்தின் பொருளாளராகப் பணியாற்றியுள்ளார். 2009 ஆம் ஆண்டிலிருந்து தற்போதுவரை அச்சங்கத்தின் தலைவராக உள்ளார்.

மேலும் 245 உறுப்பினர்களைக் கொண்ட கரூர் கொங்கு கல்வி அறக்கட்டளையில் 2000ம் ஆண்டிலிருந்து 2006ம் ஆண்டுவரை பொருளாளராகப்

பணியாற்றியுள்ளார். 2007 ம் ஆண்டிலிருந்து இன்றுவரை அதனுடைய தலைவராக உள்ளார்.

இந்த அறக்கட்டளையின் கீழ் கொங்கு கலை அறிவியல் கல்லூரி, கொங்கு வெள்ளாளர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி மற்றும் கொங்கு மேல்நிலைப்பள்ளி ஆகிய மூன்று கல்வி நிறுவனங்கள் இவரது தலைமையில் இயங்குகின்றன.

இவர் தலைவர் பொறுப்பை ஏற்ற உடனே, கரூர் மாவட்டக் கிராமப்புற ஏழை எளிய குழந்தைகள், சிறந்த கல்வியைக் குறைந்த கட்டணத்தில் பெறும் பொருட்டு 2007–2008 கல்வியாண்டு முதல் கொங்கு உயர்நிலைப்பள்ளி என்ற மாநிலப் பாடத்திட்டத்துடன் கூடிய தமிழ் மற்றும் ஆங்கிலவழிப் பள்ளியை அறக்கட்டளையின் மூன்றாவது நிறுவனமாகத் துவக்கினார். இந்தப்பள்ளியில் தற்போது 1500 மாணவர்கள் பயின்று வருகிறார்கள்.

இவர் தலைவராகப் பதவியேற்ற பிறகு கல்லூரியில் 2000 பேர் அமரக்கூடிய வகையில் ஒரு பிரமாண்டமான கலையரங்கம் கட்டப்பட்டு மாணவர்கள் மற்றும் பொதுமக்களுக்குப் பெரிதும் பயன்படுகிறது.

கைத்தறி ஏற்றுமதி மற்றும் வளர்ச்சிக் கழகத்தில் (HEPC) ஒன்பது வருடங்கள் நிர்வாகக்குழு உறுப்பினராகச் செயல்பட்டுள்ளார். கடந்த ஒன்றரை வருடங்களாக இந்தக்கழகத்தின் துணைத்தலைவராகப் பணியாற்றி வருகின்றார். இவர் ஜவுளித் தொழில் சம்பந்தமாக உலக நாடுகள் பலவற்றிற்குச் சென்று வந்துள்ளார்.

2006ம் வருடம் மத்திய அரசால் 25 ஜவுளிப் பூங்காக்கள் அமைக்க ஒப்புதல் வழங்கப்பட்டது. அதில் தமிழ்நாட்டிற்கு 6 ஜவுளிப் பூங்காக்கள் ஒதுக்கப்பட்டன. கரூர் ஜவுளிப் பூங்கா 2008ல் ஆண்டு வேலை துவங்கப்பட்டு, 26/02/2011 அன்று மத்திய ஜவுளித்துறை அமைச்சராக இருந்த திரு. தயாநிதிமாறன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்த மாபெரும் ஜவுளிப் பூங்காவின் தலைவராக இருந்து வழி நடத்தி வருபவரும் இவர்தான். இந்த ஜவுளிப் பூங்காவிற்காக அயராது உழைத்து அனைவராலும் பாராட்டும்படி மிகவும் சிறப்பாக உருவாக்கி இருக்கிறார்.

இந்த ஜவுளிப் பூங்கா ரூபாய் 135 கோடி மதிப்பீட்டில் சுமார் 110 ஏக்கர் பரப்பளவில் உலகத்தரத்துடன் அனைத்து விதமான நவீனத் தொழில் நுட்பத்துடன் அழகான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நேரடியாகச் சுமார் 3000 பேர்களும், மறைமுகமாகச் சுமார் 10000 பேர்களும் வேலை வாய்ப்பினைப் பெறுவார்கள்.

இப்பூங்காவின் முகப்பிலேயே சுமார் 23,000 சதுர அடி பரப்பளவில் மக்களின் பொதுப்பயன்பாட்டிற்காக மருந்தகம், மருத்துவமனை, ஏடிஎம் வசதியுடன் கூடிய கனரா வங்கிச் சேவை, பண்டக சாலை, அஞ்சல் அலுவலகம், உணவகம், அங்காடிகள் என அனைத்து வசதிகளையும் செய்துள்ளார்கள்.

மேலும் சுமார் 50 குழந்தைகளைப் பராமரிக்க ஏதுவாகச் சிறந்த குழந்தைகள்

காப்பகமும் அமைக்கப்பட்டுள்ளது. மேற்கூடிய அனைத்து வசதிகளையும் திறம்படி நிர்வகிக்க 11000 சதுர அடியில் நிர்வாக அலுவலகமும் கட்டப்பட்டுள்ளது.மொத்தத்தில் இந்த ஜவுளிப் பூங்கா தேவையான உட்கட்டமைப்பு வசதியுடன் கூடிய பசுமை நிறைந்த ஜவுளிப்பூங்கா என மத்திய அமைச்சரால் பாராட்டப்பட்ட பெருமைக்குரியது. இந்தப் பூங்காவில் மொத்தம் 35யூனிட்,1 ஏக்கர், 2 ஏக்கர் மற்றும் 3 ஏக்கர் என்ற அளவில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஜவுளிப் பூங்கா இந்தியாவிலேயே மாதிரி ஜவுளிப் பூங்கா என மத்திய, மாநில அமைச்சர் பெருமக்களால் பாராட்டப்பட்டது.

ஜவுளிப் பூங்காவின் உள் கட்டமைப்பில் நீண்ட அகலமான வழித்தடங்கள், இருபுறமும் பசுமையான மரங்கள், தொழிற்சாலைக் கட்டிடத்தில் விரிவாக்கம் செய்யப்போதிய இடவசதி, வழி நெடுகிலும் மின்சார விளக்குகள், மழை நீர் சேகரிக்கும் வகையில் குள வசதி, தடையில்லா மின்சாரம் கிடைக்க 110/10 கே.வி. மின் நிலையம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. இப்பூங்காவில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் நவீன தொழில் நுட்பத்துடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த ஜவுளிப் பூங்கா மூலம் கரூர் ஜவுளி ஏற்றுமதி வணிகம் மேலும் பல கோடி ரூபாய்க்கு உயர வாய்ப்புகள் உள்ளன.

இவரது சேவையினை வேண்டி மாவட்ட ஆட்சியரின் வேண்டுகோளுக் கிணங்க மாவட்டச் சாரண இயக்கத்தின் கௌரவத் தலைவராகவும் பணியாற்றி வருகின்றார்.


திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 2008 ஆம் ஆண்டு கொங்கு சாதனையாளர் விருது வழங்கிக் கௌரவித்தது. நமது கொங்கு நண்பர்கள் சங்கத்திற்கு 225 உறுப்பினர்களைப் பெற்றுத் தந்து அதன் மூலமாக ரூபாய் 22.50 லட்சத்தையும், அதுமட்டுமில்லாமல் ரூபாய் 7 லட்சம் தன்னுடைய பங்காகவும், மேலும் ரூபாய் 3 லட்சத்தை தனது நண்பர் அக்னி ஸ்டீல் திரு. சின்னசாமி அவர்களிடமும் பெற்று, ஆக மொத்தம் ரூபாய் 32.50 லட்சத்தைப்பெற்றுத் தந்து நமது சங்கத்தின் வளர்ச்சிக்குப்பெரிதும் உதவியுள்ளார். திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து அவர்களின் சாதனைகளும், சமுதாயத் தொண்டும், கொடையுள்ளமும் இளைய தலைமுறையினருக்கு வழிகாட்டியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

திரு. அட்லஸ் எம்.நாச்சிமுத்து அவர்கள் நமது கொங்குச் சமுதாயத்திற்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த மக்கள் சமுதாயத்திற்கும் பல அரிய பணிகளைச் செய்து வருகிறார். கரூர் நகரின் ஜவுளித் தொழில் மற்றும் பொருளாதர வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியுள்ளார். கல்விப்பணியிலும், சமுதாயப்பணியிலும் மிகச்சிறந்து விளங்குகிறார்.

கொங்குச் சமுதாய மக்கள் வள்ளல் தன்மைக்குப் பெயர் பெற்றவர்கள் என்பதற்கு ஒரு சிறந்த உதாரணமாகத் திகழ்கின்ற திரு.அட்லஸ் எம்.நாச்சிமுத்து அவர்களுடைய அரிய சாதனைகளையும், சேவையையும் போற்றும் வகையில், அவருக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்குமாமணி’ விருது வழங்கி பெருமைகொள்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு மாமணி



## கே.ஏ. செங்கோட்டுவேல்

நாமக்கல் மாவட்டம் பேளுக்குறிச்சி கிராமத்தில் தெய்வத்திரு. அத்தியப்பக் கவுண்டர் – தெய்வத்திரு. அரமாயி அம்மாள் தம்பதியருக்கு 1929 ஆம் ஆண்டு பிறந்தவர், திரு. கே. ஏ. செங்கோட்டுவேல் அவர்கள்

ஒன்று முதல் நான்காம் வகுப்பு வரை இராமயிப்பட்டி திண்ணைப் பள்ளியிலும், ஐந்தாம் வகுப்பை கல்குறிச்சி வெள்ளாளப் பட்டி மாவட்டக் கழகத் துவக்கப்பள்ளியிலும், ஆறுமுதல் ஏழாம் வகுப்பு வரை இராசிபுரம் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியிலும், எட்டு முதல் பதினொன்றாம் வகுப்பு வரை ஆத்தூர் மாவட்டக் கழக உயர்நிலைப் பள்ளியிலும் பயின்றார்.

பள்ளிப் படிப்பை முடித்த பிறகு, சேலம் நகராட்சிக் கல்லூரியில் B. A. பட்டம் பெற்றார்.

அரசியல் ஈடுபாடு கொண்டு, காங்கிரஸ் கட்சியில் சேர்ந்து பணியாற்றினார். 1989 ஆம் ஆண்டு முதல் 1996 ஆம் ஆண்டுவரை, தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி துணைத் தலைவராகப் பணியாற்றினார்.

திரு. செங்கோட்டுவேல் அவர்கள் விவசாயிகளின் மேம்பாட்டிற்காகவும் , முன்னேற்றத்திற்காகவும் அரும் பாடு பட்டுப் பணியாற்றினார். அனுமதிக்கப் பட்டதற்கும் அதிகமாக குதிரைத் திறன் கொண்ட மின்மோட்டார்களை இயக்கிய விவசாயிகளுக்கு, 1990 ஆம் ஆண்டுக்கு முந்தைய காலத்தில், தமிழ்நாடு மின்சார வாரியம் இலட்சக் கணக்கான ரூபாய் அபராதம் விதித்தது. அப்போதைய தமிழ்நாடு மின்சார வாரியத் தலைவர் மற்றும் உயர் அலுவலர்களுடன் விவசாயிகள் சங்கத்தின் சார்பில் பேச்சுவார்த்தை நடத்த ஏற்பாடு செய்தார்.

அந்தக் கூட்டத்தில் முன்னர் விதிக்கப்பட்ட அனைத்து அபராதத் தொகையை ரத்து செய்யவும், அனுமதி பெறாமல் இயக்கப்பட்ட அதிக குதிரைத் திறன் கொண்ட மின் மோட்டார்களை வரன்முறைப் படுத்தவும். மின் இணைப்புப் பெயர் மாற்றத்தை கிராம நிர்வாக அலுவலர் சான்று மட்டுமே பெற்று, பெயர் மாற்றிக் கொள்வதற்கான அனுமதியைப் பெற்றுத் தருவதற்கும் திரு. செங்கோட்டுவேல் பெரும் பங்காற்றினார். விவசாயிகளுக்கான பேரிழப்பைத் தடுத்து, பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதில் வெற்றி கண்டார்.

சேலம் சேகோ சர்வ் நிறுவனம், விற்பனைக்கு வரும் ஜவ்வரிசி தரத்தில் 1 ppm அளவுக்கு மேல் (HCA) ஹைட்ரோ சயனிக் ஆசிட் நஞ்சு இருந்தால் ஏலத்திற்கு அனுமதிப்பதில்லை என்ற விதியை அமல்படுத்தியது. மேலும் தரத்தேர்வு பெறாத சரக்குகளை வெளியே எடுத்துச் செல்ல மூட்டைக்கு ரூ 50 அபராதம் விதித்தது. இதனால் பல ஜவ்வரிசி ஆலையினர் தாங்கள் உற்பத்தி செய்யும் ஜவ்வரிசியை குறைந்த விலைக்கு தனியார் வியாபாரிகளுக்கு விற்கவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது, இதன் காரணமாக மரவள்ளிக் கிழங்கு விலையில் விலைகுறைப்பு செய்யப்பட்டதால், வியாபாரிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டது.

இதைக் தடுக்க, தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் சார்பில் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து ரூபாய் 50 அபராதத் தொகையை வசூலிக்கத் தடை பெறக் காரணமாயிருந்தார். இந்திய விஞ்ஞான ஆராய்ச்சிக் கழகத்திடமிருந்து (ICAR), ஜவ்வரிசியில் 5 ppm வரை ஹைட்ரோ சயனிக் ஆசிட் இருக்கலாமென்றும், அது மனித ஆரோக்கியத்திற்கு எந்த விதத்திலும் தீங்கு விளைவிக்காது என்னும் அறிவுரையும், அறிவிப்பும் பெறுவதற்குப் பாடுபட்டு வெற்றி கண்டார். இவருடைய முயற்சியால், தற்போது 5ppm வரை உள்ள ஜவ்வரிசி மூட்டைகளும் ஏலத்தில் பங்கேற்க அனுமதிக்கப் படுகின்றன. அதனால் ஜவ்வரிசிக்கு நல்ல விலை கிடைப்பதுடன், மரவள்ளிக் கிழங்கு விலை உயர்ந்து விவசாயிகள் லாபம் அடைந்து வருகிறார்கள்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கத்தின் தலைவராக 1980 ஆம் ஆண்டு முதல் தற்போதுவரை உள்ளார். பால் உற்பத்தியாளர்களது பொருளாதார மேம்பாட்டிற்காக தொடர்ந்து 36 ஆண்டுகளாகப் பாடுபட்டு வருகிறார். பால் உற்பத்தியாளர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி, பல போராட்டங்கள்

நடத்தி அரசின் கவனத்தை ஈர்த்தவர் இவர். எருமைப்பால் ஆரம்பக் காலத்தில் லிட்டர் ஒன்றுக்கு ரூ1.26 ஆக இருந்தது. தற்போது லிட்டர் ரூ 26 ஆக உள்ளது. பசும் பால் கொள்முதல் விலை ரூ18 அளவுக்கு உயர்த்தப்பட இவர் முன்னின்று நடத்திய போராட்டங்களே காரணம் என்றால் அது மிகையாகாது.

1990 ஆம் ஆண்டு இந்திய அரசு பால் மற்றும் பால் பொருட்கள் ஆணை (MMPO) மூலம், தனியார் பால் நிறுவனங்கள் ஒரு குறிப்பிட்ட பகுதிக்குள் மட்டுமே பாலை வாங்கி விற்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தது குறிப்பிட்ட எல்லையில் மட்டுமே பால் கொள்முதல் செய்ய வேண்டும் என்ற விதியை மாற்றி நாட்டின் எந்தப் பகுதியிலும் தனியார் நிறுவனங்கள் பால்கொள்முதல் செய்வதற்கு. ஆணையைத் திருத்தம் செய்ய இந்திய அரசை அணுகி வெற்றி கண்டார். பால் உற்பத்தி செய்யும் விவசாயிக்கு, இரண்டு அமைப்புகளில் விற்பனை செய்யும் வாய்ப்புகள் இருந்தால்தான், பாலுக்கு நியாயமான விலை கிடைக்கும் என்பதில் உறுதியாக உள்ளார் அவர்.

கடின உழைப்பு, இன்சொல், எளிமை, விவசாயிகள் படும் வேதனை கண்டு, அவர்களுக்காக உழைத்திடும் மனிதநேயம் போன்ற அருங்குணங்களுக்கு இவர் சொந்தக்காரர்.

திரு. செங்கோட்டுவேல் – தெய்வத்திரு அண்ணபூரணி தம்பதியருக்கு இரண்டு மகன்கள் மற்றும் ஒரு மகள் உள்ளனர். மூத்தமகன் கேப்டன் S. விஜயகுமார் சிவில் விமானியாகப் பணியாற்றி வருகிறார். இளைய மகன் திரு. ரத்னகுமார் விவசாயம் மற்றும் பிற தொழில்களும் செய்து வருகிறார். மகள் திருமதி சித்ரா சேரலாதன்அமெரிக்காவில் கலிபோர்னியா மாகாணத்தில் வசித்து வருகிறார்.

தமிழக விவசாயிகள் முன்னேற்றத்திற்காகவும், பால் உற்பத்தியாளர்கள் நலனுக்காவும் வாழ்நாளெல்லாம் பாடுபட்டு சாதனைகள் பல புரிந்துள்ள திரு. செங்கோட்டுவேல் அவர்களைப் பாராட்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு மாமணி’ விருது அளித்து பெருமை கொள்கிறது.

❖❖❖❖❖

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**2009 ஆம்ஆண்டு 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கி சிறப்பிக்கப்பட்டவர்கள்**

| | |
|---|---|
| 1. கவிஞர் சக்திக்கனல் (க.பெ.பழனிச்சாமி) | சிறந்த இலக்கியப் பணி |
| 2. திரு. இரா.நல்லதம்பி கவுண்டர் | சிறந்த கிராமப்புற தொழில் பணி |
| 3. திரு. பி.எம்.கருப்பண்ணன் | சிறந்த கல்விப் பணி |
| 4. திரு. ஆர்.பெருமாள்சாமி | சிறந்த கல்வி மற்றும் விவசாயப் பணி |
| 5. டாக்டர் ஆர்.ருக்மணி | சிறந்த ஆசிரியர் பணி |
| 6. டாக்டர் பி.செல்வராஜ் | சிறந்த மருத்துவப் பணி |
| 7. திரு. எஸ்.ராஜேந்திரன் | சிறந்த தொழிலதிபர் மற்றும் சமுதாயப் பணி |
| 8. திரு. பி.எம்.நாச்சிமுத்து கவுண்டர் | சிறந்த சமுதாயப் பணி |
| 9. டாக்டர் சி.சின்னசாமி | சிறந்த விவசாய விஞ்ஞானி |
| 10. திரு. சி.பொன்னுசாமி | சிறந்த சமுதாயப் பணி |
| 11. திரு. எஸ்.ஜெகநாதன் | சிறந்த சமுதாயப் பணி |
| 12. திரு. அசோகன் முத்துசாமி | சிறந்த சமுதாயப் பணி |
| 13. திரு. பி.வி.கல்யாண சுந்தரம் | சிறந்த ஊடகப் பணி |
| 14. திரு. பையா கவுண்டர் (எ) ஆர்.கிருஷ்ணன் | சிறந்த சமுதாயப் பணி |
| 15. திரு. வெ.மு.சிவநேசன் | சிறந்த சமுதாயப் பணி |
| 16. திரு. குப்பானூர் பி.சிவானந்தம் | சிறந்த பொறியாளர் மற்றும் சிறந்த சமுதாயப் பணி |

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. மு. பொன்னம்பலம்

நாமக்கள் நகருக்கு அருகாமையில் உள்ள ஆண்டிப்பட்டி புதூர் கிராமத்தில் 1950 ஆம் ஆண்டு செம்பூத்தான் குலத்தைச் சேர்ந்த திரு. முத்துசாமிக் கவுண்டர் – திருமதி காளியம்மாள் தம்பதியருக்கு மகனாக திரு. மு. பொன்னம்பலம் அவர்கள் பிறந்தார்.

இவர் பள்ளிப் படிப்பை முடித்து லாரித் தொழிலைத் தொடங்கினார். பின்னர் அதை விரிவுப் படுத்தி எல்.பி.ஜி. டேங்கர் லாரி உரிமையாளராகி, இன்று அதன் சங்கத்திற்குத் தலைவராகப் (2001 முதல் இன்று வரை) பணியாற்றி வருகிறார். தனது உழைப்பால் உயர்ந்து இன்றைய தினம் எல்.பி.ஜி டேங்கர் லாரிகள், கோழிப்பண்ணை ஆகியவற்றின் உரிமையாளராக உள்ளார். 40 ஆண்டுகளுக்கு மேலாக பொது வாழ்க்கையில் முழுமையாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டு உள்ளார்.

1989 ஆண்டு தொடங்கப்பட்ட சதர்ன் ரீஜியன் பல்க் டேங்கர் உரிமையாளர் சங்கத்தின் அடிப்படை உறுப்பினராகச் சேர்ந்து இச்சங்கத்தின் செயற்குழு உறுப்பினராகவும், டென்டர் கமிட்டி உறுப்பினராகவும் பணியாற்றி வந்துள்ளார். இவரது சிறப்பான செயல்பாடுகளைக் கருத்தில் கொண்டு சங்கத்தினர் இவருக்கு எல்.பி.ஜி சங்கத்தின் தலைவர் பொறுப்பினை 2002 ஆம் ஆண்டு வழங்கினார்கள். பொறுப்பேற்ற நாள் முதல், சங்க உறுப்பினர்கள் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வருகின்றார். டென்டர்களில் தலைமை ஏற்று சிறப்பான வாடகையினை லாரி உரிமையாளர்களுக்குப் பெற்றுத் தந்துள்ளார்.

இந்தத் தொழிலில் உள்ள சிரமங்களைப் போக்க பல போராட்டங்களை அறிவித்து அதில் வெற்றியும் கண்டுள்ளார். சங்கத்தின் உறுப்பினர்கள் எண்ணிக்கையை உயர்த்தி, சங்க உறுப்பினர்கள் வலுவுடனும் ஒற்றுமையாகவும் செயல்படும்படி வழி நடத்தி வருகின்றார். சங்கத்தின் சார்பாக இரண்டு பெட்ரோல் பங்க் நிறுவி, சங்கத்தின் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தியுள்ளார்.

1980 முதல் 1986 ஆம் ஆண்டு வரை கீரம்பூர் ஊராட்சி மன்றத் தலைவராக பதவி ஏற்று கிராம மக்களின் நலனில் அக்கறை கொண்டு பல நல்ல காரியங்களைச் செய்து

மக்களின் அன்பைப் பெற்றவர். இவர் கொங்குச் சமுதாய முன்னேற்றத்திற்காக பெரிதும் பாடுபட்டு வருகிறார்.

கொங்கு வேளாளர் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, சங்கத்தை வளர்க்கும் பொருட்டு பல கிராமங்களுக்குச் சென்று மக்களுக்கு சமுதாய விழிப்புணர்வை ஊட்டினார். இவரது அயராத உழைப்பினைக் கண்ட சமுதாயப் பெரியவர்கள் இவரை நாமக்கல் தெற்கு மாவட்டத்தின் தலைவராக 2007 ஆம் ஆண்டு நியமித்தனர்.

கோவை, ஈரோடு, திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்ற கொங்குப் பேரவையின் மாநாடு. பொதுக் கூட்டங்கள் அனைத்திலும் பங்கு கொண்டு திறம்பட செயலாற்றி உள்ளார். ஈரோட்டில் நடைபெற்ற மாநாட்டுக்கு நாமக்கல் பகுதியில் இருந்து லாரி, பேருந்து, கார் போன்ற நூற்றுக்கணக்கான வாகனங்களில் சமுதாய மக்களை அழைத்துச் சென்று அம்மாநாடு வெற்றி மாநாடாக அமைந்ததற்குப் பெரிதும் உறுதுணையாயிருந்தார்.

இது தவிர சமுதாய மக்களின் உரிமைக்காகப் பல போராட்டங்களில் கலந்து கொண்டும், பொருள் உதவி வழங்கியும் தலைவர் பொறுப்பை சிறப்புடன் ஆற்றி வருகிறார்.

2008 ஆம் ஆண்டு நாமக்கல்லில் நடைபெற்ற கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவையின் மண்டல மாநாட்டுப் பொறுப்பை முழுமையாக ஏற்று இரவு, பகல் பாராமல் அரும்பாடுபட்டு மாநாட்டினை வெகு சிறப்பாக நடத்திக் காட்டினார்.

திருக்கோவில் பணிகளிலும் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டுள்ளார். பிரசித்தி பெற்ற புண்ணியஸ்தலமான நாமக்கல் வட்டம் கீரம்பூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ எட்டுக்கையம்மன் கோவிலில் நடைபெற்ற குடமுழுக்கு விழாவினை சீரும், சிறப்புமாக நடத்தியதில் இவர் முக்கியப் பங்காற்றியுள்ளார். இத்திருக்கோயில் அறக்கட்டளை நிறுவி அதன் தலைவராகப் பொறுப்பேற்று மிகவும் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறார்.

சதர்ன் ரீஜியன் பல்க் எல்.பி.ஜி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவராகவும், அகில இந்திய மோட்டார் போக்குவரத்து காங்கிரஸின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும், நாமக்கல் தெற்கு மாவட்ட கொங்கு வேளாளக் கவுண்டர்கள் பேரவைத் தலைவராகவும், கீரம்பூர் எட்டுக்கையம்மன் கோயில் அறக்கட்டளைத் தலைவராகவும் பொறுப்பேற்று சிறந்த தொழிலதிபராக விளங்குவதோடு அனைவரும் போற்றும்படி சமுதாயப் பணியாற்றி வரும் திரு.மு. பொன்னம்பலம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.”

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. நா.புஷ்பராஜ்

தருமபுரி மாவட்டம் பாப்பிரெட்டிப் பட்டியைச் சேர்ந்த திரு. நாராயணசாமி கவுண்டர் – திருமதி சின்னம்மாள் தம்பதியரின் மகனாக 1947 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. நா. புஷ்பராஜ்.

பாப்பீரெட்டிப்பட்டி கழக உயர்நிலைப் பள்ளியில் SSLC–ல் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்று, திருச்சி தூய சூசையப்பர் கல்லூரியில் PUC முடித்தார். B.E. (Mechanical) பட்டத்தை கோவை பி.எஸ்.ஜி. தொழில் நுட்பக் கல்லூரியிலும், M.E., (Industrial Engineering) பட்டத்தை கிண்டி பொறியியல் கல்லூரியிலும், M.A. (Public Administration) பட்டத்தை சென்னைப் பல்கலைக் கழகத்திலும், B.G.L பட்டத்தை மதுரை காமராசர் பல்கலைக் கழகத்திலும் பெற்றார். கல்லூரியில் படிக்கும்போது செஸ் விளையாட்டில் கோவை அனைத்துக் கல்லூரி மாணவர்களுள் முதலிடம் பெற்று விளங்கியதோடு, சென்னைப் பல்கலைக் கழகத்திற்காகவும் விளையாடினார். வாலிபால் விளையாட்டிலும் சிறந்து விளங்கி PSG கல்லூரிக்காக பல போட்டிகளில் கலந்து கொண்டு விளையாடினார். M.E. (Indl. Engg) படிப்பில் அண்ணா பல்கலைக் கழகத் தேர்வில் முதலிடம் பெற்றவர் இவர்.

1970 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டுவரை, 30 ஆண்டுகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, மின்வாரியத் தலைவர், ஆசிய வளர்ச்சி வங்கிக் குழுத் தலைவர் உள்பட பல உயர் அலுவலர்களின் பாராட்டைப் பெற்றார். மின்சாரம் தொடர்பான தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகளில் கலந்து கொண்டு 20க்கும் மேற்பட்ட கட்டுரைகளை இவர் சமர்ப்பித்துள்ளார். எண்ணூர் அனல் மின் நிலையம், வட சென்னை அனல் மின் நிலையம் ஆகிய இரண்டு அனல் மின் நிலையங்களின் வடிவமைப்பு, கட்டுமானம், பொருள் மேலாண்மை போன்ற முக்கியப் பிரிவுகளில் தொடர்ந்து 29 ஆண்டுகள் பணியாற்றினார். ஓராண்டு மேட்டூரில்

கண்காணிப்புப் பொறியாளராகப் பணியாற்றிய பின்னர், விருப்ப ஓய்வு பெற்றார்.

இவரது மனைவி தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களின் மூத்தமகள் மணிமேகலை. பத்தாண்டுகளுக்கு மேலாக சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினராக உள்ளார். ‘கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகள்’ என்ற தலைப்பில் பிஎச்.டி ஆய்வுப் பணி மேற்கொண்டு, சென்னைப் பல்கலைக் கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர் இவர். கொங்குச் சமுதாயம் சம்பந்தமாக 10க்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ளார். இத்தம்பதியரின் மூத்தமகன் அமரர் பாவேந்தன் நினைவாக, 2002 ஆம் ஆண்டு, ‘பாவேந்தன் நினைவு அறக்கட்டளை’ தொடங்கப்பட்டது. இதன் நிறுவனர் மற்றும் தலைவராக திரு. புஷ்பராஜ் உள்ளார்.

இந்த அறக்கட்டளை சார்பாக இதுவரை 12 நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. வாழ்க்கை நிலையாமையும் மன அமைதியும், Kongu Vellalar Marriage Riters, உறவுகளின் முகவரி, வேர்களும் விழுதுகளும், Kongu Warrior Dheeran Chinnamalai போன்ற தமிழ் மற்றும் ஆங்கில நூல்களை திரு. புஷ்பராஜ் எழுதி வெளியிட்டுள்ளார். இவற்றையும், முனைவர் மணிமேகலை புஷ்பராஜ் எழுதிய கொங்கு வேளாளர் திருமணச் சடங்குகள், தருமபுரி மாவட்டத்தில் கொங்கு வேளாளர், சிந்தைக் கினிய சிலம்பொலியார், சான்றோர் பார்வையில் சிலம்பொலியார் படைப்புகள், பூங்காவில் புதுமணம் போன்ற நூல்களையும் பாவேந்தன் நினைவு அறக்கட்டளை வெளியிட்டுள்ளது.

ஒவ்வோர் ஆண்டும் அறக்கட்டளை சார்பில் ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும், கல்வி ஊக்கத் தொகையும் வழங்கப்படுகின்றன. இதுவரை 200க்கும் மேற்பட்ட மாணவர்கள் பயனடைந்துள்ளர். 2004,2007,2008,2009 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற சென்னை கொங்கு நண்பர்கள் சங்கக் குடும்ப விழாக்களில் கலந்து கொண்ட அனைத்து உறுப்பினர்களுக்கும், அறக்கட்டளை சார்பில் நூல்கள் நன்கொடையாக அளிக்கப்பட்டன.

திரு. புஷ்பராஜ், சிலம்பொலி செல்லப்பனார் அறக்கட்டளை, கொடுமுடி குப்புசாமி கவுண்டர் நினைவு அறக்கட்டளை, பாப்பிரெட்டிப்பட்டி தீரன் சின்னமலை அறக்கட்டளை ஆகியவற்றில் உறுப்பினராக இருப்பதோடு, சீரிய முறையில் சமுதாயத் தொண்டாற்றி வருகிறார். பாப்பிரெட்டிப்பட்டி ‘கோவெல்’ என்ற கொங்குச் சமுதாய அமைப்பின் நிறுவனர் இவர். பாப்பிரெட்டிப்பட்டி தீரன் சின்னமலை அறக்கட்டளை

தொடக்க விழா 2010 ஆம் ஆண்டு இவருடைய தலைமையில் நடைபெற்றது. திரு. ஈ.ஆர்.ஈஸ்வரன் அவர்கள் சிறப்புரையாற்றினார்.


குலம் தெரியாமல் தருமபுரி மாவட்டத்தில் வாழ்ந்து வந்த பெரும்பாலான கொங்கு வேளாளக் கவுண்டர்களுக்கு, குலம் பற்றிய விழிப்புணர்ச்சியூட்டியதுடன், இதுபற்றி ஆய்ந்து, குலங்களைக் கண்டறிந்து 'வேர்களும் விழுதுகளும்' என்ற நூலை எழுதியதுடன், அப்பகுதி மக்களுக்கு இந்நூலை நன்கொடையாகக் கொடுத்துள்ளார். அரூர், பாப்பிரெட்டிப்பட்டி வட்டங்களைச்சேர்ந்த வெளியூர்களிலும், வெளிநாடுகளிலும் வசிக்கும் கொங்குச் சொந்தங்களின் முகவரி உள்ளிட்ட விவரங்களைத் தொகுத்து நூலாக வெளியிட்டு 5000 பிரதிகளை நன்கொடையாகக் கொடுத்துள்ளார். இவர் எழுதியுள்ள ஆங்கில மொழிபெயர்ப்பு நூல்கள் கொங்குச் சமுதாயத்தின் பெருமையையும், தீரன் சின்னமலை புகழையும் மலேசியா, சிங்கப்பூர், அமெரிக்கா போன்ற நாடுகளில் பரப்பி வருகிறது.

இவருடைய இளைய மகன் கிருபா புஷ்பராஜ் அமெரிக்கா சான்பிரான்சிஸ்கோ நகரில் காப்புரிமை சட்ட வழக்கறிஞராகப் ( Patent Attorny) பணி புரிந்து வருகிறார். B.E., M.S (USA)., J.D. (Judicial Doctorate) (U.S.A) ஆகிய பட்டங்களைப் பெற்றுள்ள இவர், இந்த ஆண்டு அமெரிக்காவின் மிகச்சிறந்த இளம் வழக்கறிஞர்களுக்குத் தரப்படும் 'Rising Star' விருதைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

சிறந்த பொறியாளராகவும், எழுத்தாளராகவும், பதிப்பாளராகவும், சமூக, சமுதாய சேவையாளராகவும் விளங்கும் திரு.புஷ்பராஜ் அவர்களின் ஊடகப் பணிகளைப் பாராட்டி சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் அவருக்கு 'கொங்கு சாதனையாளர்' விருது அளித்து மகிழ்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## செல்வி பீட்ஸ் கை. கந்தசாமி

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம் முத்துக் காளிப்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கைலாப்ப கவுண்டர்– திருமதி காத்தலாயி அம்மாள் தம்பதியரின் மகனாக **1949** ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. செல்வி பீட்ஸ் கை. கந்தசாமி. கொங்கு நாட்டு வேளாளர் செல்லன் கூட்டத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் படிப்பை முடித்த பின்னர் B.Com பட்டமும், D co-op. கூட்டுறவு பட்டயமும் பெற்றார்.

**1969** ஆம் ஆண்டு முதல் கிராம கூட்டுறவு விவசாய வங்கியில் எழுத்தராகவும், கூட்டுறவு சங்கங்களின் தணிக்கையாளராகவும் கூட்டுறவு நிலவள வங்கியின் கணக்கராகவும் **17** ஆண்டுகள் பணியாற்றியுள்ளார். பின்பு **700** கோழிகளைக் கொண்ட முதல் கோழிப் பண்ணையை முத்துக்காளிபட்டி கிராமத்தில் தொடங்கி தற்போது **1.25** லட்சம் கோழிகள் கொண்ட பண்ணையையும், **120** கலப்பின மாடுகளைக் கொண்ட மாட்டுப் பண்ணையையும் உருவாக்கி விவசாயத்துடன் பண்ணைத் தொழிலையும் சிறப்பாகச் செய்து வருகிறார். மேலும் கோழி, மாடு ஆடுகளுக்குத் தேவையான கலப்பு தீவனத்தை தனது செல்வி பீட்ஸ் ஆலையில் உற்பத்தி செய்து, இத்தொழில்களில் இப்பகுதியில் முன்னோடியாகத் திகழ்கிறார்.

இவர் இராசிபுரம் பகுதி தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராகவும் , நாமக்கல் மண்டல முட்டை விலை நிர்ணயக்குழு உறுப்பினராகவும், தமிழ்நாடு கோழிப் பண்ணையாளர்கள் நலச் சங்கத்தின் பொறுப்பாளராகவும் பொறுப்பு வகித்து வருகிறார். பாரத ஸ்டேட் வங்கியுடன் இணைந்து கோழிப்பண்ணை கருத்தரங்குகளை நடத்தி, விவசாயிகளுக்கு வங்கிக் கடன் கிடைக்க வழிவகை செய்தார். ‘கிராமப் பொருளாதாரத்தில் கோழிப் பண்ணையின் பங்கு’ என்ற

தலைப்பிலும், ‘தமிழகத்தின் (பால்) வெண்மைப் புரட்சிக்கு பசும் தீவனம் மேலாண்மை’ என்ற தலைப்பிலும் தொலைகாட்சிகளில் உரையாற்றி, பலரும் இந்தத் தொழில்களை மேற்கொள்ள உதவி புரிந்துள்ளார்.

டெல்லியில் நடந்த சர்வதேச கோழிப் பண்ணை கருத்தரங்கு மற்றும் கண்காட்சியிலும், பூனா, ஹைதராபாத், சென்னை ஆகிய இடங்களில் நடந்த இந்திய கோழிப்பண்ணை கருத்தரங்குகளிலும் முக்கியப் பங்கு வகித்தார்.

இராசிபுரம் ரோட்டரி சங்கத்தின் தலைவராகவும், கவர்னர் குழுவின் உறுப்பினராகவும், பல திட்டக்குழுக்களின் தலைவராகவும் இவர் சேவையாற்றியுள்ளார். இராசிபுரம் ஸ்ரீவித்யா மந்திர் மேல்நிலைப்பள்ளியில் பெற்றோர்–ஆசிரியர் சங்கத் தலைவராக 11 ஆண்டுகள் பணியாற்றி, பள்ளிக்குப் பல வசதிகள் செய்து கொடுத்துள்ளார். பட்டணம் அரசுப்பள்ளிக்கு ரூ 5 லட்சம் திட்டத்தில் கணினி மையத்தையும், விஞ்ஞான ஆய்வுக் கூடத்தையும் நிறுவ உதவியுள்ளார்.

இராசிபுரம் நகரிலுள்ள திருக்கோயில்களில் ஆலயத் திருப்பணிகளை முன்னின்று நடத்தினார். அழகு நாச்சியம்மன் குட முழுக்கு சிறப்பு மலர்க் குழுத் தலைவராகப் பொறுப்பேற்று ரூ 25 லட்சம் நன்கொடை திரட்டி 1000 பக்கம் கொண்ட சிறப்பு மலர் வெளியிட்டு சாதனைப் படைத்தார். இராசிபுரம் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் அறங்காவலராக கடந்த 22 ஆண்டுகளாக உள்ளார்.

செல்வி பீட்ஸ் கை. கந்தசாமி, 1996 ஆம் ஆண்டு இராசிபுரம் கொங்கு நாட்டு வேளாளர் அறங்கட்டளையின் சமுதாயக் கூடம் திறப்பு விழா சிறப்பு மலர்க் குழுவின் தலைவராகப் பொறுப்பேற்று ரூ 11லட்சம் நன்கொடைபெற்று, மண்டபப் பணிகள் சிறப்பாக முடிவடையவும், சிறப்பு மலர் வெளியிடவும் பெரும் பங்காற்றினார். இந்த அறக்கட்டளையின் செயலாளராக 5 ஆண்டுகளும், பருத்திப் பள்ளி செல்லங்குலம் கொங்கு நாட்டு வேளாளர் சங்கத்தின் செயலாளராக 10 ஆண்டுகளும் , காசி விநாயகர் கொங்கு நாட்டு வேளாளர்களின் தலைவராக 15 ஆண்டுகளும், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கச் செயற்குழு உறுப்பினராக 10 ஆண்டுகளும், கொங்கு வேளாளர் சங்கங்களின் மாநிலப் பொருளாளராக 8 ஆண்டுகளும் , கொங்கு நாடு முன்னேற்றக் கழகத்தின் மாநில அமைப்பாளராகவும் பொறுப்பேற்று சிறந்த முறையில் சமுதாயப் பணியாற்றியுள்ளார்.

**1989** ஆம் ஆண்டு சிறந்த சிறு தொழில் நிறுவனத்திற்கான தமிழக அரசின் விருது, **1991**, **1992**, **1993** ஆம் ஆண்டுகளில் மேற்கண்ட விருது, **1998** ஆம் ஆண்டு சிறந்த ரோட்டரி தலைவருக்கான விருது , திருப்பராயத்துறை இராமகிருஷ்ணா மடத்தின் 'திருப்பணிச் செம்மல்' விருது, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கத்தின் கிறந்த சமுதாயப் பணிக்கான நினைவுப் பரிசு, பேரூர் அடிகளார் வழங்கிய 'கயிலைப் புனிதர்' விருது போன்றவை இவருடைய சிறப்பான சேவைக்காகக் கிடைத்த விருதுகளாகும் ,

தமிழ்நாடு கால்நடை மருத்துவப் பல்கலைக் கழகத்தின் மேலாண்மைக் கழக உறுப்பினராகவும், தமிழக அரசின் திட்டக்குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்றுப் பணியாற்றியுள்ளார்.

இவருடைய வெற்றிகளுக்கு உறுதுணையாக உள்ளவர் மனைவி திருமதி வள்ளியம்மாள், இவர் இராசிபுரம் ரோட்டரி இன்னர்வீல் சங்கத்தின் சாசனத் தலைவர். மேலும் பவர்ஹவுஸ் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தின் நிறுவனர். இத்தம்பதியருக்கு திருச்செல்வி என்ற மகளும், அருண்குமார் என்ற மகனும் உள்ளனர். திருமதி திருச்செல்வியின் கணவர் Dr. S. சுரேஷ்குமார் M.V. SC, Ph.D நாமக்கல் கால்நடை மருத்துவக் கல்லூரியில் பேராசிரியர் . மகன் திரு . அருண்குமார் M.B.A. தந்தையின் தொழில்கள் அனைத்தையும் கவனித்து லருகிறார்.

கோழிப் பண்ணை, தீவனம் போன்ற தொழிர்களில் சாதனை படைத்து சிறப்பாகச் சமுதாயப் பணியாற்றி வரும் செல்வி பீட்ஸ் கை. கந்தசாமி அவர்களைப் பாராட்டி, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையபளர்' விருது வழங்கி மகிழ்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. ப. முத்துசாமி

நாமக்கல் அருகில் உள்ள சிவியாம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. பழனியாண்டிக் கவுண்டர் – திருமதி செல்லம்மாள் ஆகியோரின் மகனாக 1937 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. ப. முத்துசாமி

நாமக்கல் கழக உயர்நிலைப்பள்ளியில் பள்ளிப் படிப்பை முடித்த இவர், திருச்சி தேசியக் கல்லூரியில் B.A பட்டம் பெற்றார். பின்னர் M.A. (தமிழ்), M.A. (ஆங்கிலம்), M.Ed., பட்டங்களைப் பெற்றார். அரசுப் பள்ளி ஆசிரியர் பணியில் சேர்ந்து பட்டதாரி ஆசிரியராகவும், தலைமை ஆசிரியராகவும் 35 ஆண்டுகள் பணியாற்றி ஓய்வு பெற்றார்.

தமிழில் மிக்க ஆர்வமும், புலமையும் கொண்டவர் இவர். தமிழன்பன், சிவிகைக்கிழார் போன்ற புனை பெயர்களைக் கொண்டுள்ள இக்கவிஞர் இதுவரை 100 கவிதைத் தொகுப்புகளை வெளியிட்டு சாதனை படைத்துள்ளார். அவற்றுள் ஒரு மழலையின் தொடக்கம், பெண்மை வெல்க, சான்றோர் நூற்றவர், புதியதோர் உலகம் செய்வோம், மானும் வேடனும், மனித வளம், வெளியேறி வருக தாயே, சொர்க்க வாசல் திறந்தது, அறிவியலின் அரும்பணி, குறிஞ்சி ஓடைகள், விடியுமா, ஒடுக்கப்பட்டோர் உரிமைக்குரல், இன்னிசை அருட்பாடல், புல்லும் கல்லும், டாக்டர் சுப்பராயன் வரலாற்றுக் காப்பியம், மானிட மாண்பு ஆகியன குறிப்பிடத் தக்கவையாகும்.

ஆங்கிலம் உள்பட பன்மொழிக் கவிதைகளையும் தமிழில் மொழி பெயர்த்து நூல்களாக வெளியிட்டுள்ளார். இந்தியாவில் உள்ள 22 மொழி கவிதைகளை, ஆங்கிலம் வாயிலாகக் கிடைத்த அரிய கவிதைகளை, தமிழில் மொழி பெயர்ப்பு செய்து சாதனை படைத்துள்ளார். தமிழிலிருந்தும் ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்து சில கவிதை நுல்களை எழுதியுள்ளார்.

வானொலி நிகழ்ச்சிகளிலும், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும் கலந்து கொண்டு கவிதை பாடியுள்ளார். பல பொதுநல அமைப்புகளில் பங்கு பெற்று சேவையாற்றி வருகிறார். தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்கத்தின் மாவட்ட

உறுப்பினராகவும், 'இளா' என்னும் ஆங்கில இதழின் துணை ஆசிரியராகவும், வேலூர் தமிழ்ப்பாவலர் மன்றத்தின் தலைவராகவும் பணியாற்றி வருகிறார்.

தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்களால் 'கவியரசர்' என்றும், தமிழறிஞர் சிலம்பொலி செல்லப்பனார் அவர்களால் 'எழுச்சிக் கவிஞர்' என்றும், 'பெருங்கவிஞர்' என்றும் வாழ்த்திப் பாராட்டுதலைப் பெற்றவர். கம்பர் விழா, கண்ணகிவிழா, வள்ளுவர் விழா, தமிழ் விழா, முற்போக்கு எழுத்தாளர் சங்க விழா, திருக்குறள் பேரவை போன்ற செந்தமிழ் மேடைகளில் தேன் தமிழ்க்கவிதை பாடிய கவியரங்கக் காவலர் இவர்.

குயில், செம்மலர், சமூக ஊழியன், கவிக்கொண்டல், தாமரை, மூவேந்தர் முரசு போன்ற இதழ்களில் தொடர்ந்து கவிதை எழுதிக் கொண்டு வருபவர் இவர். தீரன் சின்னமலை பற்றி சிறு காப்பியமும் படைத்துள்ளார்.

கவிதைத் துறையில் இவர் ஆற்றிய சாதனைகளுக்காக பல விருதுகளும், பரிசுகளும் பெற்றுள்ளார். நாமக்கல் இராமகிருஷ்ண கானசபா வழங்கிய கவியரசர் விருது, சேலம் சிலம்பொலியார் தமிழ்க்காப்பு மையம் வழங்கிய விருது, புதுடெல்லி நண்பர்கள் அமைப்பு வழங்கிய 'Bharath Excellance* விருது, பன்னாட்டு பென்குயின் வெளியீட்டு நிறுவனம் வழங்கிய "Rising Personalities of India" விருது, ஈரோடு தமிழ்ச்சங்கப் பேரவை வழங்கிய ஒட்டக்கூத்தர் விருது ஆகிய விருதுகள் குறிப்பிடத்தக்கன.


ஆசிரியர், கவிஞர், மொழிபெயர்ப்பாளர், பதிப்பாளர், சமூக, சமுதாய ஆர்வலர் போன்ற பன்முகங்கள் கொண்டுள்ள திரு. முத்துசாமி பல அறக்கட்டளைகள் வழங்கிய பரிசுகளைப் பெற்றுள்ளார். பழனியப்பா பிரதர்ஸ் வெளியிட்டுள்ள 'இருபதாம் நூற்றாண்டின் நூறு தமிழ்க் கவிஞர்கள் என்ற நூலில் இவர் பெயரும், இவரின் இலக்கியப் பணிச் சிறப்புகளும் இடம் பெற்றிருப்பது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும்.

**1970** ஆம் ஆண்டு இவருக்குத் திருமணம் நடைபெற்றது. மனைவி திருமதி சின்னம்மாள். இத்தம்பதியருக்கு டாக்டர் கார்த்திகேயன் என்ற மகனும், இசைமொழி என்ற மகளும் உள்ளனர். டாக்டர் கார்த்திகேயன் M.F.Sc., Ph.D., பட்டங்கள் பெற்று தமிழக மீன்வளத்துறையில் உதவி இயக்குநராகப் பணியாற்றி வருகிறார். மகள் இசைமொழி ஆசிரியையாகப் பணிபுரிந்து வருகிறார். இருவரும் திருமணமானவர்கள்.

இலக்கியத் துறையில் தன்னுடைய எண்ணற்ற அருந்தமிழ் கவிதைகளால் சாதனை படைத்துள்ள எழுச்சிக் கவிஞர் தமிழன்பன் ப. முத்துசாமி அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. சிஏ.ஜி.இராமசாமி

கோவை மாவட்டம் உருமாண்டம் பாளையம் கிராமத்தில் திரு.கணபதி கவுண்டர் – திருமதி பொன்னம்மாள் தம்பதியருக்கு 1954 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் திரு. சிஏ.ஜி. இராமசாமி.

ஆதி கூட்டத்தைச்சேர்ந்த இவர் சி.ஏ. தேர்வில் சிறப்பிடம்பெற்றுத் தேர்ச்சி பெற்ற பின்னர், 1984 ஆம் ஆண்டு கணக்குத் தணிக்கையாளராகப் (Chartered Accountant) பணிபுரிய ஆரம்பித்தார். இந்திய கணக்குத் தணிக்கையாளர்கள் நிறுவனத்தின் (Institute of Chartered Accountants of India) தலைவராக உள்ளார். 25 ஆண்டுகள் ICAI நிறுவனத்தின் உறுப்பினராக மிகச் சிறப்பாகப் பணியாற்றிய திரு. இராமசாமி, 2011/2012 ஆம்ஆண்டிற்கான தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ICAI வின் தென்னிந்திய மண்டலக்குழுவின் உறுப்பினராக 1994 ஆம் ஆண்டு முதல் பணியாற்றினார். 1990–2002 ஆம் ஆண்டு, இக்குழுவின் தலைவராகப் பொறுப்பேற்று, சீரிய முறையில் பணியாற்றினார். இவர் தலைவராக இருந்த போது அகில இந்திய அளவில் SIRC சிறந்த மண்டலத்திற்கான விருதையும், சிறந்த மாணவர்கள் சங்கத்திற்கான விருதையும் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

சென்னை IIA உறுப்பினராகவும், 1988–1989 ஆம்ஆண்டு ICAI கோவை கிளையின் தலைவராகவும், 1984–1989 ஆம் ஆண்டுகளில் SIRC கோவை கிளையின் நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணிபுரிந்துள்ளார். 1994–1995 ஆம் ஆண்டு தமிழகஅரசு நிறுவனமான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக்கழகத்தின் இயக்குநராகவும் பணியாற்றியுள்ளார்.

2010/2011 ஆம் ஆண்டு ICAI நிறுவனத்தின் துணைத்தலைவராக பலரும் பாராட்டும்வகையில் பணியாற்றினார். இந்திய அரசால் அமைக்கப்பட்டுள்ள தர பரிசீலனை வாரியத்தின் உறுப்பினராக நியமிக்கப்பட்டு சிறப்பாகப் பணிபுரிந்தவர் இவர்.

IFAC வாரியத்தின் தொழில்நுட்ப ஆலோசகராக நியமிக்கப்பட்டுள்ளார். SAFA

மையத்தின் படித்தரம் மற்றும் தரக்கட்டுப்பாட்டுப் பிரிவின் துணைத்தலைவராகவும், SAFA ஆற்றல் மிகு வேலைக்குழுவின் உறுப்பினராகவும், NACAS தேசிய ஆலோசனைக் குழுவின் உறுப்பினராகவும், TDS நிலைக்குழுவின் உறுப்பினராகவும், ICAI நிறுவனத்தின் ஒழுங்கு நடவடிக்கைக்குழு, நிதிக்குழு, செயற்குழு ஆகிய குழுக்களில் உறுப்பினராகவும், ICAI தேர்தல் சீர்த்தக்குழுத் தலைவராகவும், நிதிச்சட்டங்கள் குழுத்தலைவராகவும், தொடர் தொழிற்கல்விக்குழுத் தலைவராகவும், உள்ளாட்சிஅமைப்புகளுக்கான தணிக்கை நியமக்குழுத் துணைத்தலைவராகவும் தணிக்கைக்குழு மற்றும் பன்னாட்டு வரிவிதிப்புக் குழுத் துணைத்தலைவராகவும், தகவல் தொழில்நுட்பத்துறைக் குழுவின் துணைத்தலைவராகவும், பெரிய நிறுவனங்கள் மேலாண்மைக்குழுவின் துணைத்தலைவராகவும், நிதி விவகார சட்டங்கள் குழுத் துணைத்தலைவராகவும், வணிகக்கல்வி மற்றும் வேலை ஆலோசனைக்குழுத் துணைத்தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்புடன் பணியாற்றிய பெருமைக்குரியவர்.

கணக்குத் தணிக்கையாளர் பத்திரிகையின் இணை ஆசிரியராகப் பொறுப்பேற்று பல கட்டுரைகளையும் அதில் எழுதியுள்ளார், 2007 ஆம் ஆண்டு முதல் 2010ஆம் ஆண்டு வரை, இந்திய கணக்குத் தணிக்கையாளர் குழுவின் பல்வேறு துணைக்குழுக்களில் உறுப்பினராக இருந்துள்ளார். இவருடைய நுண்ணறிவும், திறமையும், தலைமைப் பண்புகளும் இவரை சிறந்தவொரு கணக்குத் தணிக்கையாளராக பிரகாசிக்க முக்கியக் காரணங்களாக அமைந்தன.

திரு. இராமசாமி அவர்கள் அருமையான எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் உள்ளார். தேசிய மற்றும் பன்னாட்டு கருத்தரங்குகள் பலவற்றில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றியுள்ளார். கோல்ப் விளையாட்டில் சிறந்து விளங்கும் இவர் பல சமூக அமைப்புகளில் உறுப்பினராக உள்ளார்.

கொங்கு மண்டலத்தைச் சேர்ந்த ஒருவர் ICAI நிறுவனத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இதுவே முதல்முறை, இவருடைய மனைவி திருமதி தீபா இராமசாமி கணவரின் சாதனைக்குத் துணை நிற்கிறார். இத்தம்பதியரின் மகன் செல்வன் பிரகலாத் தற்போது +2 வகுப்பு படித்து வருகிறார்.

தன்னுடைய சிறப்பான பணியினால் ICAI தலைவர் பதவி வரை உயர்ந்து கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு. சிஏ.ஜி.இராமசாமி அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## டாக்டர் கே.பிரகாசம்

நாமக்கல் மாவட்டம், பேளுக்குரிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. குப்பண்ணகவுண்டர் – திருமதி பெருமாயி தம்பதியருக்கு 1949 ஆம் ஆண்டு மகனாகப் பிறந்தவர் டாக்டர் கே.பிரகாசம் அவர்கள்.

பள்ளிப்படிப்பை பேளுக்குரிச்சி உயர்நிலைப்பள்ளியில் முடித்த பின்னர், பி.யு.சி. படிப்பை காரைக்குடி அழகப்பா கல்லூரியில் முடித்தார். பி.யு.சி. தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெற்று, சென்னை ஸ்டேன்லி மருத்துவக்கல்லூரியில் சேர்ந்து 1974 ஆம் ஆண்டு எம்பிபிஎஸ் பட்டத்தைப் பெற்றார். முதலிடம் பெற்றுத் தேறியதற்குத் தங்கப்பதக்கம் பெற்றார். சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக்கல்லூரியில் பயின்று 1983 ஆம் ஆண்டு D.Ortho பட்டம் பெற்றார். சென்னை மருத்துவக் கல்லூரியில் மேற்படிப்பு முடித்து 1990 ஆம் ஆண்டு M.S. (Ortho) பட்டம் பெற்றார். பல்கலைக்கழகத்தில் முதலிடம் பெற்று சாதனை படைத்தார்.

அரசு மருத்துவ மனைகளில் சில ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றிய பின்னர், 2002 ஆம் ஆண்டு முதல் தொடர்ந்து 16 ஆண்டுகள் முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பு பேராசிரியராகப் பணியாற்றினார் இளநிலை பட்டப் படிப்பிற்கும், முதுநிலைபட்டப் படிப்பிற்கும் தேர்வாளராகப் பணியாற்றியுள்ளார்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகத்தின் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்பிற்கு உள்தேர்வாளராக (Internal Examiner) சென்னை கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி, கோவை மருத்துவக் கல்லூரி கோவை பி.எஸ்.ஜி. மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி, பெருந்துறை ஐ.ஆர்.டி. மருத்துவக் கல்லூரி மற்றும் சேலம் அரசு மோகன் குமாரமங்கலம் மருத்துவக் கல்லூரி, ஆகிய கல்லூரிகளிலும், வெளித்தேர்வாளராக மணிப்பால் உயர்கல்வி அகாடமி, மணிப்பால்

கஸ்தூரிபா மருத்துவக்கல்லூரி, மங்களூர் கஸ்தூரிபா மருத்துவக்கல்லூரி, கர்நாடக மாநிலம் ராஜிவ் காந்தி மருத்துவ விஞ்ஞானப் பல்கலைக்கழகம்ஒம் ஆகியவற்றிலும் பணியாற்றியுள்ளார்.

தமிழ்நாடு அரசு டாக்டர்கள் சங்கத்தலைவராக 15 ஆண்டுகளும், அரசு டாக்டர்கள் சங்கத்தின் மாநிலச் செயலாளராக 2 ஆண்டுகளும் பணியாற்றி அரசு டாக்டர்களுக்கு 4000 உயர் பதவிகளை ஏற்படுத்த முக்கியக் காரணமாயிருந்தார். தமிழ்நாடு மருத்துவக் கவுன்சிலின் தலைவராக 6 ஆண்டுகள் சிறப்பாகப் பணியாற்றினார். அப்போது டாக்டர்கள் எந்தவித காலதாமதமுமின்றி உடனடியாக எம்.பி.பி.எஸ். பட்டத்தை கணினி மூலமாகப் பதிவு செய்யவும் ஏற்பாடு செய்தார்.

25 ஆண்டுகள் அரசுப்பணியில் இருந்தபோது பெரும்பாலும் கிராமப்பகுதிகளிலேயே மருத்துவசேவை புரிந்துள்ளார். சேலம் மோகன் குமாரமங்கலம் மருத்துவக்கல்லூரியில் இடுப்பு மற்றும் முதுகெலும்பு அறுவை சிகிச்சையை முதன் முதலாக வெற்றிகரமாகத் செய்தார்.

2007 ஆம் ஆண்டு அரசுப் பணியிலிருந்து ஓய்வு பெற்றபின்பு, தற்போது சேலம் வினாயகா மிஷன் மருத்துவக்கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். தற்போது தமிழ்நாடு மருத்துவ கவுன்சில் தலைவராகவும், தமிழ்நாடு எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தில் செனட் உறுப்பினராகவும் உள்ளார்.

இவருடைய மனைவி திருமதி சந்தானலட்சுமி. இத்தம்பதியருக்கு இரண்டு மகள்கள். மூத்த மகள் டாக்டர் அபிநயா, MCH. அவர்களின் கணவர் டாக்டர். ரவிக்குமார், MCH. இளைய மகள் டாக்டர் சிந்துஜா MBBS., DGO அவர்களின் கணவர் டாக்டர் நவீன் M.S. (Ortho)

கிராமப்பகுதி மக்களுக்கு சிறந்த மருத்துவப்பணியாற்றியும், புகழ்பெற்ற, மருத்துவப்பேராசிரியராகவும், தமிழ்நாடு அரசு மருத்துவர்களின் பணி நலன்களுக்காக போராடிய வருமான டாக்டர் கே.பிரகாசம் கொங்குச் சமுதாயத்திற்குப் பெரும் பெருமை சேர்த்துள்ளார்.

புனிதமான மருத்துவப்பணியில் சாதனைகள் பல புரிந்துள்ள பேராசிரியர் டாக்டர் கே.பிரகாசம் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கி கௌரவிக்கிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. மு. இராஜகோபாலன்

பொள்ளாச்சி வட்டம் எஸ். மேட்டுப் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த திரு. சு.முத்துசாமி கவுண்டர் – திருமதி செல்லாத்தாள் ஆகியோரின் மகனாக 1959 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. மு. இராஜகோபாலன்.

பள்ளிப்படிப்பை காளியண்ணன் புதூர் அரசு உயர்நிலைப் பள்ளியிலும், கோவை தூய மைக்கேல் உயர்நிலைப் பள்ளியிலும் முடித்த பின்னர், B.Sc., பட்டப்படிப்பை பொள்ளாச்சி நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கலைக் கல்லூரியிலும், B.Tech (Automobile) பட்டப்படிப்பை சென்னை M.I.T. யிலும், M.B.A. (Marketing) பட்டப்படிப்பைப் சென்னைப் பல்கலைக்கழகத்தில் பகுதி நேரமாகவும் முடித்தார்.

1983 ஆம் ஆண்டு முதல் 1988 ஆம்ஆண்டு வரை சென்னை என்பீல்டு இந்தியா நிறுவனத்தில் பொறியாளராகப் பணியாற்றினார். 1984 ஆம் ஆண்டு அவிநாசிக்கு அருகிலுள்ள தெக்கலூர் கிராமத்தில் நான்கு பள்ளித்தோழர்களுடன் இணைந்து கோயமுத்தூர் இரப்பர் பேக்டரீஸ் பிரைவேட் லிமிடெட் என்ற தொழில் நிறுவனத்தைத் தொடங்கினார். இன்றளவும் இந்நிறுவனம் வெற்றிகரமாக செயல்பட்டுவருகிறது.

1992 ஆம் ஆண்டு M.I.T. கல்லூரி நண்பர்கள் 25 பேருடன் இணைந்து கோவை மாருதி பேப்பர்ஸ் ஆண்டு போர்ட்ஸ் (பி) லிட். என்ற காகித ஆலையை நாமக்கல் மாவட்டம் பரமத்தி வேலூர் அருகில் உள்ள இருக்கூர் கிராமத்தில் நிறுவினார். 1994 ஆம் ஆண்டு இந்த ஆலையில் உற்பத்தி தொடங்கியது. பல கட்டங்களில் விரிவாக்கம் பெற்று தற்போது தினம் 100டன் காகிதம் உற்பத்தி செய்யப்படுகிறது. 300 பேர் பணியாற்றி வருகின்றனர். இந்த ஆலையில் மறுசுழற்சி முறையில் காகித உற்பத்தி செய்வதால் காடு மற்றும் இயற்கை வளங்கள் பாதுகாக்கப்படுகின்றன. (100% Zero Discharge) 100 சதவீதம் தண்ணீர் மறுசுழற்சி முறையால் சுற்றுச்சூழல் பாதுகாக்கப்படுகிறது. 2250 கிலோவாட் திறன் கொண்ட காற்றாலைகள் நிறுவப்பட்டு மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

85 ஆண்டுகளுக்கும் மேலாக உழவு செய்யாமல் இருந்த 225 ஏக்கர் நிலத்தை கூட்டுப் பண்ணைத் திட்ட அடிப்படையில் கையகப் படுத்தி இயற்கை வேளாண்மை முறையில் செயல்படுத்தி சாதனை புரிந்ததற்கு முக்கியக் காரணமாயிருந்தார் இவர். இவருடைய இந்த முயற்சியால் 50 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் நிரந்தர வேலை வாய்ப்புப் பெற்றுள்ளன.

தொழிலாளர்களின் பாதுகாப்புக்குக் குடும்பத்துடன் இணைந்த காப்பீட்டுத்திட்டம், சுய முன்னேற்றப் பயிற்சிகள், குழந்தைகள் படிப்பு மானியம், கேன்டீன் வசதி, யோகா பயிற்சிகள் போன்ற ஆக்கபூர்வமான செயல்களைச் செயல்படுத்தி வருகிறார். காகித ஆலை மற்றும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளில் அனைவருடலும இணைந்து மரக்கன்றுகளை நட்டுப் பராமரிப்பு செய்து வருவதோடு, மழைநீர் சேகரிப்புத் திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறார்.

காகித ஆலை நிர்வாகத்தின் சார்பில் ஏழை மாணவர்களக்குக் கல்வி உதவித் தொகை வழங்குவதற்கும், 40 பள்ளி நூலகங்களுக்கு காந்தி அடிகள் வாழ்க்கை வரலாற்று நூல்களை இலவசமாக வழங்குவதற்கும் இவர் ஏற்வாடு செய்தார்.

திரு.மு. இராஜகோபாலன் கோவை மாருதி பேப்பர்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநராகவும், தமிழ்நாடு கிராப்ட் காகித ஆலைகள் கூட்டமைப்பின் தலைவராகவும், மண்டல சுங்கவரி ஆலோசனைக்குழு உறுப்பினராகவும், காகித ஆலை இணை தொழில்நுட்பக் குழு உறுப்பினராகவும் பொறுப்பேற்று மிகச் சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.


காகித ஆலையின் சார்பாக ஆண்டுதோறும் திருவண்ணாமலையில் அன்னதானம் வழங்கப்பட்டு வருகிறது. இவர் தான் பயின்ற அரசுப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்துவதற்கு முக்கியக் காரணமாயிருந்தார். பொள்ளாச்சியில் கிருஷ்ணர் கோவில் உருவாகப் பெருமளவில் உதவியாக உள்ளார். ஆன்மீகத்திலும், யோகா மற்றும் இயற்கை மருத்துவத்திலும் மிகுந்த ஈடுபாடு கொண்டுள்ளவர் இவர்.

இவருடைய மனைவி டாக்டர் லதா MBBS., DCH., பரமத்தியில் குழந்தைகள் மற்றும் பொது மருத்துவமனை அமைத்துப் பணியாற்றி வருகிறார். மகள் R. அபர்ணா தற்போது +2 பயின்று வருகிறார். விஜய் டி.வி. நடத்திய ஏர்டெல் சூப்பர் சிங்கர் ஜுனியர் பாட்டுப் போட்டியில் இறுதிப் போட்டிக்கு வரைக்கும் வந்த பெண் இவர் ஒருவரே. Most Spirited Singer என்ற பரிசைப் பெற்றார். கர்நாடக இசையில் சிறந்து விளங்கும் இவர் பல பரிசுகளை வென்றுள்ளார்.

தொழில் துறையிலும், சமுதாயப் பணியிலும் சாதனைகள் பல புரிந்து சிறந்து விளங்கும் திரு. மு. இராஜகோபாலன் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திரு. டி.ஆர். சந்தான கோபாலகிருஷ்ணன்

கோவை மாவட்டம் பீளமேட்டில் விவசாயக் குடும்பத்தில் கீரன் குலம் திரு. ராமசாமி கவுண்டர் – நல்லாசிரியை திருமதி பழனியம்மாள் தம்பதிக்கு மகனாக 1947 ஆம் ஆண்டு பிறந்தவர் திரு. சந்தான கோபால கிருஷ்ணன். பள்ளிப்படிப்பை முடித்து இடைநிலை ஆசிரியர் பயிற்சி பெற்ற பின்னர், 1967 ஆம் ஆண்டு 19வது வயதிலேயே ஆசிரியர் பணிப் பொறுப்பேற்றார்.

இளநிலை, இடைநிலை, தலைமை ஆசிரியராக 21 ஆண்டுகளில் 16 பள்ளிகளில் மிகச்சிறப்பாகப் பணி புரிந்தார். பணியாற்றிய இடங்களில் எல்லாம் பெற்றோர், மாணவர்கள், இதர ஆசிரியர்கள், கல்வி உயர் அலுவலர்கள் ஆகியோரின் பாராட்டைப் பெற்றவர் இவர். பாடங்களை மாணவர்களுக்கு சிறப்பான முறையில் கற்பித்ததோடு, ஒழுக்கம், கட்டுப்பாடு, பணிவு, மரியாதை போன்ற நல்லொழுக்கங்களையும் கற்றுக் கொடுத்தார்.

இவரிடம் மூன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை படித்த ஏழை மாணவனுக்கு, பண உதவி செய்ததோடு சமுதாய மன்றம் ஒன்றில் பகுதிநேர வேலைக்கும் ஏற்பாடு செய்து கொடுத்தார். காலத்தினால் செய்த இந்த உதவியினால் அந்த மாணவன் இன்று M.Tech., வரை பயின்று கோவை P.S.G. தொழில் நுட்பக் கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி வருகிறார். இவரிடம் உதவிபெற்றுப் பயின்ற மற்றொரு மாணவர், M.E. பட்டம் பெற்று அமெரிக்காவில் பொறியாளராகப் பணியாற்றி வருகிறார்.

தொடக்கக் கல்வி ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே M.Sc., M.Ed., பட்டங்கள் பெற்றார். மாலை நேரக் கல்லூரியில் பயின்றபோது, மாணவர் செயலாளராகப் பொறுப்பேற்றிருந்தார்.

1987 ஆம் அண்டு முதுகலை கணித ஆசிரியராகப் பதவி உயர்வு பெற்று பழனி கீரனூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும், பின்னர் கோவை இருகூர் அரசு மேல்நிலைப் பள்ளியிலும் பணிபுரிந்தார்.

இவர் பள்ளிகளில் ஆசிரியராகப் பணியாற்றிய காலங்களில் பள்ளிப் பராமரிப்பு,

பள்ளிக்குத் தேவையான பொருட்களை உடனடியாக ஏற்பாடு செய்தல், மாணவ, மாணவியரை ஊக்குவித்துப் பரிசுப் பொருட்கள் வழங்குதல், காலம் தாழ்த்தாமல் பள்ளிக்கு வருதல், வகுப்புகளில் முறையாக பாடம் நடத்துதல், எழுதிய கரும்பலகையைத் தானே சுத்தம் செய்தல், பள்ளி நேரத்தில் வேறு பணி செய்யாமல், பள்ளி முடியும் வரை காத்திருத்து மாணவர்களுக்காக உழைத்துக் கற்பித்தல் போன்றவை இவரை ஒரு திறமைவாய்ந்த ஆசிரியராக உயர்த்தின.

முதுநிலைப் பட்டத்தாரி ஆசிரியர்கள் ஊதிய உயர்வு முரண்பாட்டைக் களைய சென்னையில் நடந்த மறியல் போராட்டத்தில் கலந்து கொண்டு **19** நாட்கள் சிறையில் இருந்தார்.

இவர் பணியாற்றிய இருகூர் அரசு மேல்நிலைப் பள்ளியில் வசதிகளைக் கூட்டி, நிதி ஆதாரத்தைப் பெருக்கி, மாணவர்களின் தேர்ச்சி விகிதங்களை அதிகரித்து பள்ளிக்குப் பெருமை சேர்த்தார். இதன் காரணமாக தமிழக அரசின் நல்லாசிரியர் விருதைப் பெற்றார்.

அரசுப் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின்பு, சேலம் புனித கிரேஸ் வில்யன் ஆசிரியர் பயிற்சி நிறுவனத்தில் பொறுப்பு முதல்வராகவும், இராசிபுரம் SRP கல்வியியல் கல்லூரியில் பொறுப்பு முதல்வராகவும், சேலம் பொன்னுசாமி ஆசிரியர் பயிற்சி நிறுவனம் மற்றும் பொள்ளாச்சி சிவா ஆசிரியப் பயிற்சி நிறுவனத்தில் கணிதப் பேராசிரியராகவும் பணியாற்றினார்.

அமெரிக்காவின் Lotus Learning Private Ltd., நிறுவனத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு அதன் பயன்களைக் கொங்கு சமுதாயத்தினருக்கும், நண்பர்களுக்கும் அளித்து வருகிறார். இந்த நிறுவனம் **1994** மற்றும் **1995** ஆம் ஆண்டுகளில் இவருக்கு சாதனையாளர் விருதை வழங்கி கொளரவித்துள்ளது. கோவை கொங்கு நற்பணி மன்றத்தின் பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளார்.

இவருடைய மனைவி திருமதி சரஸ்வதி இவருக்கு சிறந்த துணைவியாகவும் விளங்கி வருகிறார். மகன் S. பார்த்திபன் பொறியாளர். இவருடைய மனைவி திருமதி கவிதா M.C.A., M.Phil., பட்டங்கள் பெற்றவர்.

மகள் திருமதி S. மஞ்சு பார்கவி M.Sc., M.Phil., திருமணமானவர். கணவர் திரு. T. தியாகராஜன் B.E.,. திரு. சந்தான கோபால கிருஷ்ணன் தன் குடும்பத்தின் சார்பாக குலதெய்வம் செல்வ நாயகி அம்மனுக்கு கட்டடம் புதுப்பிக்கும் பணிக்கு ரூ. **30,000/–** நன்கொடையாக வழங்கியுள்ளார். தீரன் சின்னமலை பேச்சுக் கலை பயிற்சி முகாம் நடத்தி கொங்குச் சமுதாய இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கத் திட்டமிட்டுள்ளார்.

புனிதமான ஆசிரியப் பணியில் அயராது உழைத்து எண்ணற்ற மாணவர்களை வாழ்க்கையில் ஏற்றம் பெற வைத்து, சிறந்த முறையில் கல்விப் பணியாற்றிய நல்லாசிரியர் திரு சந்தான கோபால கிருஷ்ணன் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு சாதனையாளர்



## திருமதி இராஜேஷ்வரி ஞானசுந்தரம்

கரூர் மாவட்டம் திருகாடுத்துறை ஊராட்சி நடையனூரில் 1971 ஆம் ஆண்டு பிறந்தவர் திருமதி இராஜேஷ்வரி. அவருடைய தந்தை திரு. ராமசாமி கவுண்டர் தாயார் திருமதி பூரணம்.

பனிரெண்டாம் வகுப்பு வரை படித்துள்ள இவருடைய கணவர் ஞானசுந்தரம் விவசாயம் மற்றும் சிறு தொழில்கள் செய்து வருகிறார். 1990 ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்றது. சமுதாயப் பணியிலும், பொது வாழ்விலும் நாட்டம் கொண்டுள்ள திருமதி இராஜேஷ்வரி ஊருக்கு உழைத்திடும் உன்னத நோக்கம் கொண்டு, 1996 ஆம் ஆண்டு கரூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வேட்ட மங்கலம் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 8032 மக்கள் தொகை கொண்ட இந்த ஊராட்சி 38 குக்கிராமங்களும், இரண்டு ரெவின்யூ கிராமங்களும் கொண்டதாகும்.

1996–2006 வரை இந்த ஊராட்சி பெண்களுக்காக ஒதுக்கப்பட்டிருந்தது. 2006–2011– இல் இந்த ஊராட்சி பொது என்ற வகைக்கு மாற்றப்பட்டது. இருப்பினும் இவருடைய சிறப்பான பணியினாலும், சரியான நிர்வாகத்தாலும், தன்னலமற்ற உழைப்பாலும், ஊராட்சிப் பகுதியில் ஊர் மக்கள் நலத் திட்டங்களை நல்ல முறையில் நிறைவேற்றி மக்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற்ற காரணத்தினால் 2006 ஆம் ஆண்டு மீண்டும் ஊராட்சி மன்றத் தலைவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

இவர் 2001–2006 ஆம் ஆண்டு வரை ஐந்து ஆண்டுகளாக நுகர்வோர் பாதுகாப்புக்குழு உறுப்பினராகவும், 2002 ஆம் ஆண்டு முதல் 2007 ஆம் ஆண்டு வரை ஊரக வளர்ச்சித்துறையின் கொள்முதல் குழு உறுப்பினராகவும், 2006– 2011 ஆம் ஆண்டுவரை கரூர் மாவட்ட ஊராட்சித் தலைவர் சங்கத்தின் தலைவராகவும் பொறுப்பேற்று சிறப்பாகப் பணியாற்றி வருகிறார்.

வேட்டமங்கலம் ஊராட்சிப் பகுதியில் உள்ள பெரும்பாலான மக்கள்

விவசாயிகளாகவும், விவசாயத் தொழிலாளர்களாகவும், கரூர் நகரத்தில் உள்ள நிறுவனங்களுக்கு வேலைக்குச் சென்று வருபவர்களாகவும் உள்ளனர். இவர் பொறுப்பேற்ற பிறகு நிறைய மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கி அவர்களுக்கு வங்கியில் கடன் உதவி பெற்றுக் கொடுத்து சுய தொழில்கள் செய்ய ஏற்பாடு செய்துள்ளார் . இதனால் அப்பகுதி மக்கள் தங்களுடைய தேவைகளைத் தாங்களாகவே பூர்த்தி செய்து கொள்கின்றனர். சிறப்பு முகாம் மற்றும் கிராம சபாவில் எய்ட்ஸ், குழந்தைத் தொழிலாளர் முறை ஒழிப்பு. பெண் கல்வி போன்றவை பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி அடிமை முறையை ஒழிக்கப் பாடுபட்டு வருகிறார்.

ஊராட்சியின் மூலமும் , பல்வேறு பொறுப்புகளில் உள்ளவர்களிடத்திலும் முடிந்த அளவு நிதி திரட்டி ஊராட்சிக்குத் தேவையான அடிப்படை வசதிகளை பலரும் பாராட்டும் வண்ணம் செய்து வருகிறார். மேலும் மக்கள் பங்களிப்பாக அவர்களிடத்திலேயே ஒரு பங்கு நிதியைப் பெற்று, ‘நமக்கு நாமே’ திட்டம் மூலமாகவும் அவர்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்து வருகிறார்.

கிராமப்புறப் பெண்களால் என்ன செய்ய முடியும் என்று ஏளனம் பேசியவர்கள் இருந்தனர். அவர்கள் ஆச்சரியப்படும் அளவுக்கு, கரூர் மாவட்டத்திலேயே முதன் முதலாக பெண்களுக்கு சுய உதவிக் குழுவின் மூலம் ரூபாய் ஐந்து இலட்சம் கடன் பெற்று செய்த தொழிலால் லாபம் பெற்றதோடு,வாங்கிய கடனை உரிய காலத்தில் திருப்பிச் செலுத்திவிட்டனர்.

மக்களுக்கு மிகவும் பயன் தரக்கூடிய மருத்துவ முகாம், கண்சிகிச்சை முகாம், கால்நடை மருத்துவ முகாம் போன்றவற்றை அரசு மூலமாகவும் தனியார் பங்களிப்பு மூலமாகவும், தமிழ்நாடு காகித ஆலை நிறுவனத்தின் மூலமாகவும் நடத்தி வருகிறார்.


இலட்சக்கணக்கான ரூபாய் செலவில் ஊராட்சித் திட்ட வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றி உள்ளார். குறிப்பாக, குடிநீர் வசதி, சாலை வசதி, சுற்றுச்சுவர் வசதி, நெடுஞ்சாலையில் ஆக்கிரமிப்புக் கடைகளை அகற்றிப் போக்குவரத்து வசதி, பெண்களுக்குத் தேங்காய் நாரில் கூடை பின்னுதல் , கால் மிதியடி தயாரித்தல் விரிப்பு மற்றும் கலைப் பொருட்கள் தயாரித்தல், போன்றவற்றில் பயிற்சி போன்ற திட்டப்பணிகளை வெற்றிகரமாகக் செயல்படுத்தினார்

ஞானசுந்தரம் – இரோஜஷ்வரி தம்பதியருக்கு சௌமியா என்ற மகளும், கண்ணன் என்ற மகனும் உள்னர். செல்வி சௌமியா B.Sc (CS) படித்து வருகிறார். செல்வன் கண்ணன் +1 வகுப்பு படித்து வருகிறார்.

பெண்களாலும் சாதிக்க முடியும் என நிரூபிக்கும் வகையில், தொடர்ந்து 15 ஆண்டுகள் ஊராட்சித் தலைவராகப் பொறுப்பேற்று, ஊரக வளர்ச்சிப் பணிகளை மிகச் சிறப்பாகச் செய்துவரும் திருமதி இராஜேஷ்வரி ஞானசுந்தரம் அவர்களுக்கு, சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

❖❖❖❖❖

# கொங்கு வேளாண் சாதனையாளர்



## திரு. எம். விக்னேஷ்

திரு. எம். விக்னேஷ், நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், பி.ஜி வலசு கிராமத்தைச் சேர்ந்த அமரர் திரு. பி. முத்துசாமி – திருமதி மரகதம் தம்பதியரின் மகனாவார்.

24 – வயது நிரம்பிய இவர், இந்திய வேளாண் ஆராய்ச்சி நிறுவனத்தில் மரபியல் துறையில் முனைவர் முதுநிலை பட்டப்படிப்பு ஆராய்ச்சியாளராக உள்ளார். முதுநிலை முனைவர் பட்டப்படிப்பு மேற்கொள்ள, இந்திய ஆராய்ச்சிக் குழுமம் 2010 ஆம் ஆண்டில் நடத்திய தேர்வில் அகில இந்திய அளவில் இரண்டாவதாகத் தேர்ச்சி பெற்று சாதனை படைத்தவர் இவர்.

தேசிய வேளாண் ஆராய்ச்சிக் குழுமத்தின் மூலம் 2011 ஆம் ஆண்டில் அகில இந்திய வேளாண்மை விஞ்ஞானிகளைத் தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட தேர்வில் அகில இந்திய அளவில் முதலிடத்தைப் பெற்று மற்றுமொரு சாதனை படைத்தார் இவர். இந்திய அரசின் மத்திய வேளாண்மை அமைச்சகத்தின் கீழ் விஞ்ஞானியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர், தனது 24 வது வயதிலேயே, அதுவும் முதல் முயற்சியிலேயே இத் தேர்வினில் வெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதுநிலை ஆராய்ச்சியின் வாயிலாக எட்டு ஆராய்ச்சி கட்டுரைகள், 5 பயிற்சி நூல்களில் அத்தியாயங்கள், இந்திய அளவிலான கருத்தரங்குகளில் 8 ஆராய்ச்சிக் கட்டுரைகள் மற்றும் 20 பொதுக்கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

இவருடைய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்று சீனாவில் இந்த ஆண்டு இறுதியில் நடைபெறவிருக்கும் 11–வது சர்வதேச மக்காச் சோளம் கருத்தரங்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அகில இந்திய வேளாண்மை விஞ்ஞானிகள் தேர்வில் முதலிடம்பெற்றுச் சாதனை படைத்து, கொங்குச் சமுதாயத்திற்குப் பெருமை சேர்த்துள்ள திரு. எம்.விக்னேஷ் அவர்களுக்கு சென்னை சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு வேளாண் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வி பொன் சக்தி அம்பாலிகை

செல்வி சக்தி அம்பாலிகை கணக்குத் தணிக்கையாளர் திரு. கே.பி. பொன்னுசாமி – சென்னை கொங்கு நண்பர்கள் சங்கச் செயற்குழு உறுப்பினர் புலவர் உத்தமி பொன்னுசாமி ஆகியோரின் புதல்வி ஆவார். சொந்த ஊர் ஈரோடு மாவட்டம் வெள்ளகோவில் அருகில் உள்ள கருப்பன் வலசு ஆகும். சென்னை எத்திராஜ் கல்லூரியில் B.com., பட்டமும், சென்னைப் பல்கலைக் கழகத்தில் M.com., பட்டமும் பெற்றுள்ளதோடு, ACA படிப்பையும் முடித்துள்ளார். இவருடைய சகோதரர் பாலாஜி குகன், B.A., L.L.B., பட்டங்கள் பெற்றவர்.

சக்தி அம்பாலிகை பள்ளி, கல்லூரி நாட்களில் சிறந்த மாணவியாக விளங்கியதோடு அனைத்துப்பள்ளிகளுக்கிடையே நடைபெற்ற பேச்சு, பாட்டு, கட்டுரை, கவிதை ஆகிய போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுள்ளார். தேவாரம், திருப்புகழ் தெளிவாகப் பயின்றவர்.


தன் எட்டாவது வயதில் நாட்டியக்கலா சக்கரவர்த்தினி k.J. சரசா அவர்களிடம் பரதநாட்டியம் பயில ஆரம்பித்து, அருட்செல்வர் கொங்கு மாமேதை நா. மகாலிங்கம் அவர்கள் தலைமையில் அரங்கேற்றம் நடைபெற்றது. நீதியரசர் சதாசிவம், திரு. வி.சி. பெருமாள் I.P.S., (Retd), மாலதி IAS, மூத்த வழக்கறிஞர் திரு.இரா. காந்தி, திரு.சக்தி ஏ.கே. வேங்கடசாமி, எழுத்தாளர் சிவசங்கரி முதலானோர் வாழ்த்துரை வழங்கினர்.

கிருஷ்ணகான சபா, கபாலி பைன் ஆர்ட்ஸ், கார்த்திக் பைன் ஆர்ட்ஸ், மியூசிக் அகாடமி, தியாக பிரம்ம சபா, பார்த்தசாரதி சபா, பிரம்மகான சபா, மைலாப்பூர் பைன் ஆர்ட்ஸ், கரூர் நாரதகான சபா போன்ற புகழ்பெற்ற சபாக்களில் 50ம்மேற்பட்ட பரதநாட்டிய நிகழ்ச்சிகளை மிக அருமையாகவும், சிறப்பாகவும் நடத்தி பாரம்பரியமிக்க ‘இந்து’, தினகரன், தினத்தந்தி முதலான பத்திகிக்கைகள் உட்பட பலரது பாராட்டுக்களைப் பெற்றுள்ளார். தொலைக்காட்சிகளில் பல முறை இடம் பெற்ற இவருடைய அற்புதமான நடநிகழ்ச்சிகள் பலராலும் பெரிதும் பாராட்டப்பட்டன.

நாட்டிய மயூரி, சிறந்த நடனமணி, நாட்டிய யுவமணி ஆகிய பட்டங்களைப் பெற்று, பரத நாட்டியக் கலையில் இவர் முத்திரைப் பதித்து வருகிறார்.

கொங்குச் சமுதாயத்தில் பிறந்து பரதநாட்டியக் கலையில் சிறந்து விளங்கும் செல்வி பொன். சக்தி அம்பாலிகை அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டுகிறது.

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் என்.டி. ராகேஷ்குமார்

ஈரோடு மாவட்டம் கோபிசெட்டிப்பாளையம் அருகில் உள்ள கலிங்கியம் கிராமத்தைச் சேர்ந்த தொழிலதிபர் திரு. வி.ஏ. தட்சிணாமூர்த்தி – திருமதி பூங்கோதை ஆகியோரின் மகனாகப் பிறந்தவர் 15வயது நிரம்பிய செல்வன் என்.டி. ராகேஷ்குமார்.

ஓதாளம் கூட்டத்தைச் சேர்ந்த இவர் அபார ஞாபக சக்தி கொண்டவர். செஸ் விளையாட்டில் மூன்றாவது வயது முதலே ஈடுபட்டு, அனைவரும் பாராட்டத்தக்க சாதனைகளை நிகழ்த்தியுள்ளார். கோபி பாரதி வித்யாலயா பள்ளியில் பயின்ற இவர் 10 ஆம் வகுப்பில் 500 க்கு 472 மதிப்பெண்கள் பெற்றுள்ளார். கணிதம், அறிவியல் இரண்டிலும் 100/100 வாங்கியுள்ளார்.

ஆறு வயது முதல் செஸ் போட்டிகளில் கலந்து கொண்டு வந்துள்ள இவர், 2002 ஆம் ஆண்டு தன்னுடைய ஏழாவது வயதிலேயே ஒரு போட்டியில் முதலிடம் பெற்றுச் சாதனை படைத்தார். இதுவரை 133 செஸ் போட்டிகளில் கலந்து கொண்டு பல பரிசுகளைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

2010–2011 ஆம் ஆண்டு 17 வயதிற்குட்பட்டவர்களுக்கான மாநில அளவிலான போட்டியில் கலந்து கொண்ட இவர், மாநிலத்தில் முதலிடம் பெற்று செஸ் சேம்ப்பியன் ஆகி சாதனை படைத்தார். மாநில அளவில் முதலாவது இடத்தை இரு முறையும், தேசிய அளவில் ஏழாவது இடத்தையும் பெற்றுள்ள இவர் சிங்கப்பூர் உள்பட பல வெளிநாடுகளில் நடந்த செஸ் போட்டிகளிலும் கலந்து கொண்டு பரிசு பெற்றுள்ளார். ஆங்கிலத்தில் பல கவிதைகளை எழுதிப்பாராட்டுப் பெற்றவர். கிரிக்கெட் விளையாட்டிலும் வல்லவர்.

கொங்கு சமுதாயத்திற்குப் பெருமை தேடித்தரும் வகையில் செஸ் விளையாட்டில் சாதனை புரிந்துவரும் செல்வன் என்.டி.ராகேஷ்குமார் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் 'கொங்கு இளம் சாதனையாளர்' விருது வழங்கிப் பாராட்டுகிறது. செஸ் விளையாட்டில் மேலும் பல சாதனைகள் படைத்திட, சங்கம் வாழ்த்துகின்றது.

❖❖❖❖❖

# கொங்கு இளம் சாதனையாளர்



## செல்வன் எஸ். தனுஷ்

சேலம் மாவட்டம் வெள்ளக்கல்பட்டி கிராமத்தைச் சேர்ந்த பொறியாளர் திரு. எஸ். சுரேஷ் சென்னையில் இத்தாலியன் நிறுவனம் ஒன்றில் தென்மண்டல மேலாளராகப் பணிபுரிகிறார். இவருடைய மனைவி டாக்டர் விஜயா. இத்தம்பதியரின் 11 வயது மகன் செல்வன் எஸ். தனுஷ் ஆதம்பாக்கம் டி.ஏ.வி. பள்ளியில் படித்து வருகிறார்.

வேளச்சேரி சர்வதேச நீச்சல் வளாகத்தில், பயிற்சியாளர் திரு. வீரபத்திரன் அவர்களிடம் நீச்சல் பயிற்சி பெற்ற செல்வன் தனுஷ், தமிழ்நாட்டிற்கும், கொங்குச் சமுதாயத்திற்கும் பெரும் பெருமை சேர்க்கின்ற வகையில் நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு வியத்தகு சாதனைகள் பல நிகழ்த்தி பலரது பாராட்டுதல்களையும் பெற்றுள்ளார்.

2006 ஆம் ஆண்டிலிருந்து 2011 ஆம் ஆண்டு தற்போது வரை இவர் பல்வேறு நீச்சல் போட்டிகளில் கலந்து கொண்டு பெற்றுள்ள பதக்கங்களின் எண்ணிக்கை கேட்போர் யாவரையும் மலைக்க வைக்கும். ஆம்! இவர் 125 பதக்கங்கள் பெற்று அசத்தியுள்ளார்.


மாவட்ட அளவில் 46 பதக்கங்களும், மாநில அளவில் 60 பதக்கங்களும், தென்னிந்திய அளவில் 11 பதக்கங்களும், தேசிய அளவில் 8 பதக்கங்களும் – ஆக மொத்தம் 125 பதக்கங்கள் பெற்று சாதனைகள் நிகழ்த்தியுள்ளார். தேசிய அளவில் இரண்டு புது சாதனைகளையும், மாநில அளவில் 6 புதிய சாதனைகளையும் நிகழ்த்தியுள்ளார். ஒன்பது முறை சேம்ப்பியன்ஷிப் (championship) விருதுகளைப் பெற்றுள்ளார்.

நுரையீரல் அலர்ஜிக்காக 5 வயதில் நீச்சல் பயிற்சியை ஆரம்பித்து, நீச்சல் போட்டிகளில் வியத்தகு சாதனைகள் பல புரிந்துள்ள செல்வன் எஸ். தனுஸ் அவர்களுக்கு சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம் ‘கொங்கு இளம் சாதனையாளர்’ விருது வழங்கிப் பாராட்டி மகிழ்கிறது. மேலும் பல சாதனைகள் படைக்க சங்கம் வாழ்த்துகிறது.

❖❖❖❖❖

# 2010 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்



பெயர் : ல.சிந்து
த/பெ : A.R.லட்சுமணன்
ஊர் : அக்கியம்பட்டி, நாமக்கல்
பள்ளி : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல்
மதிப்பெண் : 492/500

## முதல் இடம்



பெயர் : பி.நந்தினி
தா/பெ : P.பாப்பாத்தி
ஊர் : பெருமாப்பட்டி
பள்ளி : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல்
மதிப்பெண் : 492/500

## இரண்டாம் இடம்




பெயர் : வே.சுருதி
த/பெ : வேலுச்சாமி
ஊர் : கொங்கு நகர் காலனி, நாமக்கல்
பள்ளி : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல்
மதிப்பெண் : 491/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 5ம் இடம், மாவட்டத்தில் 3ம் இடம்

## மூன்றாம் இடம்



பெயர் : ரா.ராகவி
த/பெ : வே.ராஜீ
ஊர் : கந்தபுரி, நாமக்கல்
பள்ளி : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல்
மதிப்பெண் : 490/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 6ம் இடம், மாவட்டத்தில் 4ம் இடம்

## மூன்றாம் இடம்



பெயர் : வீ.விபிதா
த/பெ : ரா.வீரப்பன்
ஊர் : அலங்காநத்தம் பிரிவு, நாமக்கல்
பள்ளி : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல்
மதிப்பெண் : 490/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 6ம் இடம், மாவட்டத்தில் 4ம் இடம்

## மூன்றாம் இடம்

பெயர் : ர.தீபிகா
த/பெ : எஸ்.ரங்கசாமி
ஊர் : முத்துகாப்பட்டி, நாமக்கல்
பள்ளி : பாரதி மேல்நிலைப்பள்ளி, ரெட்டிப்பட்டி, நாமக்கல்
மதிப்பெண் : 490/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 6ம் இடம், மாவட்டத்தில் 4ம் இடம்

2010 ம் ஆண்டில் நடைபெற்ற 10 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.


# 2010 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்



பெயர் : R.சந்தியா
த/பெ : R.ராசப்பன்
ஊர் : பொன் நகர், கொந்தளம், நாமக்கல்
பள்ளி : விவேகானந்தா மேல்நிலைப்பள்ளி, நாமக்கல்
மதிப்பெண் : 1186/1200
சிறப்புத் தகுதி : மாநில அளவில் இரண்டாம் இடம்

## இரண்டாம் இடம்




பெயர் : S.மனோபிரவீன்
த/பெ : M.சிவகாமணி
ஊர் : கொல்லப்பட்டி, நாமக்கல்
பள்ளி : வித்ய விகாஷ் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
மதிப்பெண் : 1185/1200
சிறப்புத் தகுதி : மாநில அளவில் மூன்றாம் இடம்



பெயர் : T.சுருதி
த/பெ : சா.திருமூர்த்தி
ஊர் : தமிழ் நகர், ஈரோடு
பள்ளி : பி.வி.பி. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு
மதிப்பெண் : 1181/1200

## இரண்டாம் இடம்



பெயர் : M.சிபிசெந்தூர்
த/பெ : ஆர்.முத்துசாமி
ஊர் : கணபதிபாளையம், ஈரோடு
பள்ளி : பி.வி.பி. மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு
மதிப்பெண் : 1180/1200

**2010 ம் ஆண்டில் நடைபெற்ற 12 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.**

## 2011 ஆம் ஆண்டு 10–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

## முதல் இடம்



பெயர் : ச.சங்கீதா
த/பெ : கு.சக்திவேல்
ஊர் : பேட்டையார்தோட்டம், சேலம்
பள்ளி : முத்தமிழ் மேல்நிலைப்பள்ளி
சேலம்
மதிப்பெண் : 496/500
சிறப்புத்தகுதி : மாநிலத்தில் 1ம் இடம் (State Board)

## இரண்டாம் இடம்



| | |
|---|---|
| பெயர் | : சு.ஹர்ஷினிஸ்ரீ |
| த/பெ | : M.K.சுந்தரம் |
| ஊர் | : முனிசிபல் காலனி, ஈரோடு |
| பள்ளி | : பாரதி வித்யபவன் மெ.மே.பள்ளி, திண்டல் |
| மதிப்பெண் | : 493/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 1ம் இடம் (Metric) |



| | |
|---|---|
| பெயர் | : ம.அனிதா |
| த/பெ | : கே.மணி |
| ஊர் | : போலீஸ் குடியிருப்பு, தருமபுரி |
| பள்ளி | : செந்தில் மெட்ரிக் மேல்நிலை பள்ளி, தருமபுரி |
| மதிப்பெண் | : 493/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 1ம் இடம் (Metric) |

| | |
|---|---|
| பெயர் | : மா.தரணிதரன் |
| த/பெ | : மாதேஸ்வரன் |
| ஊர் | : அவல்பூத்துறை, ஈரோடு |
| பள்ளி | : நவரச மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, ஈரோடு |
| மதிப்பெண் | : 492/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 2 ம் இடம் (Metric) |

## மூன்றாம் இடம்



| | |
|---|---|
| பெயர் | : அ.காவியா |
| த/பெ | : எஸ்.அய்யாசாமி |
| ஊர் | : சித்தேஸ்வரா நகர், தருமபுரி |
| பள்ளி | : செந்தில் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி தருமபுரி |
| மதிப்பெண் | : 490/500 |
| சிறப்புத்தகுதி | : மாநிலத்தில் 4ம் இடம் |



| | | |
|---|---|---|
| பெயர் | : | ப.ஹேமலதா |
| த/பெ | : | ஆர்.பரமசிவம் |
| ஊர் | : | விளக்கேத்தி, ஈரோடு |
| பள்ளி | : | எஸ்.எஸ்.வி.மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி |
| மதிப்பெண் | : | 490/500 |

2011 ம் ஆண்டில் நடைபெற்ற 10 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

## 2011 ஆம் ஆண்டு 12–ஆம் வகுப்பு அரசுத் தேர்வில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்கள்

### முதல் இடம்

| | | |
|---|---|---|
| பெயர் | : | L.S.தக்ஷிணி |
| த/பெ | : | சுப்பிரமணியம் |
| ஊர் | : | கொத்தமங்கலம், நாமக்கல் |
| பள்ளி | : | கிரீன் பார்க் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, நாமக்கல் |
| மதிப்பெண் | : | 1187/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாநில அளவில்3 வது இடம், மாவட்டத்தில் 1ம் இடம் |

### இரண்டாம் இடம்



| | | |
|---|---|---|
| பெயர் | : | சா. தமிழ்செல்வன் |
| த/பெ | : | சாமிநாதன் |
| ஊர் | : | கருமாண்டி செல்லிபாளையம், ஈரோடு |
| பள்ளி | : | ஈரோடு இந்து கல்வி நிலையம் மெ.மே.நி.பள்ளி ஈரோடு |
| மதிப்பெண் | : | 1184/1200 |
| சிறப்புத் தகுதி | : | மாவட்டத்தில் 2வது இடம் |



பெயர் : S.ராஜேஸ்வரி
த/பெ : எம்.எஸ்.சுப்பிரமணியம்
ஊர் : ஊத்தங்கரை, கிருஷ்ணகிரி
பள்ளி : எஸ்.வி.மந்திர் மெ.மே.நி.பள்ளி
மதிப்பெண் : 1184/1200

பெயர் : ஆர். சேதுபதி
த/பெ : ரவிச்சந்திரன்
ஊர் : மொடக்குறிச்சி
பள்ளி : ஈரோடு இந்து கல்வி நிலையம் மெ.மே.நி.பள்ளி, ஈரோடு
மதிப்பெண் : 1184/1200

## முதல் இடம்



பெயர் : C.L.சொர்ணலதா
த/பெ : கே.எஸ்.லோகநாதன்
ஊர் : பொன்முத்து நகர், நல்லூர், திருப்பூர்
பள்ளி : செண்ட் ஜோசப் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி, திருப்பூர்
மதிப்பெண் : 1180/1200

**2011 ம் ஆண்டில் நடைபெற்ற 12 ம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் கொங்கு இன மாணவர்களில் அதிக மதிப்பெண்கள் பெற்றதைப்பாராட்டி, சங்கம் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.**

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

**31–07–2011** அன்று நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொண்டு பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ. எண். | விளையாட்டின் பெயர் | பரிசு பெற்றோர் I & II & III பரிசு |
|---|---|---|
| 1. | Ball Throw (Boys)<br>III & IV Std. | I எஸ். சுந்தர்<br>II ஆர்.எஸ். விக்னேஷ்<br>III டி.எம். இளவரசன் |
| 2. | Ball Throw (Boys)<br>V & VI Std. | I ஜீ. நித்தின்<br>II எம். கார்த்திக்<br>III பி. பிரதீப் |
| 3 | Ball Throw (Boys)<br>VII & VIII Std. | I எஸ். சனோஜ்<br>II பி. மிதுன் குமார்<br>III எஸ். தமிழ் செல்வன் |
| 4 | Ball Throw (Boys)<br>IX & X Std. | I எஸ். திலக்<br>II எஸ்.ஜி. முரளி<br>III ராஜா ஸ்ரீபதி |
| 5 | Shotput (Boys)<br>16 - 20 Years | I ஆர். ரகுஷாந்த்<br>II எஸ். தினேஷ் ராஜ்<br>III கே. பெரியதம்பி |
| 6 | Shotput (Boys)<br>21 to 30 Years | I ராம் மோகன்<br>II பாலாஜி<br>III குமார் |
| 7 | Shotput (Men)<br>31 to 40 Years | I கே.என். தர்மராஜ்<br>II ஆர். மயில் வாகனன்<br>III ஜெகதீஷ் |
| 8 | Shotput (Men)<br>41 to 50 Years | I பாலசுப்பிரமணியன்<br>II ஆர்.கே. பாலன்<br>III ஆர். சிவசெல்வம் |
| 9 | Shotput (Men)<br>51 to 60 Years | I கே. ராஜாமணி<br>II சதாசிவம்<br>III அன்பழகன் |
| 10 | Shotput (Men)<br>61 and above | I ஏ. சிவசாமி<br>II ஆர். சிவமலை<br>III செங்கோட்டுவேலு |

| | | |
|---|---|---|
| 11 | Lucky Corner (Men) | I ஆர். சிவசெல்வம்<br>II எஸ். ராமையா<br>III கே. வெங்கடாசலம் |
| 12 | Running Race (Boys)<br>LKG & UKG 25 Metres. | I சபரீஷ்<br>II விஜயராஜகோபலன்<br>III சக்திவேல் |
| 13 | Running Race<br>I & II Std. (Boys) 25 Metres | I எஸ். சர்வேஷ்<br>II ஆர்திஷ்<br>III ஆர். அனுரித்<br>Iv பி.என். ஆகாஷ்<br>v ராகுல் கிஷோர் |
| 14 | Running Race<br>50 Metres (Boys)<br>III & IV Std. | I எஸ். சுந்தர்<br>II பி.என். சஞ்ஜீவி<br>III எஸ். அகிலன் |
| 15 | Running Race<br>75 Metres (Boys)<br>V & VI Std. | I ஜீ. நித்தின்<br>II எஸ்.எஸ். சித்திராம்<br>III கே.ஆர். சரண் |
| 16 | Running Race<br>200 Metres (Boys)<br>VII & VIII Std. | I எஸ். சனோஜ்<br>II பி. பிரேம்<br>III எஸ். தமிழ்ச்செல்வம் |
| 17 | Running Race<br>400 Metres (Boys)<br>IX & X Std. | I எஸ். திலக்<br>II சி.எஸ். ராஜஸ்ரீபதி |
| 18 | Running Race<br>200 Metres (Boys)<br>16 to 20 Years | I ஆர்.சூரியநாதன்<br>II பி. கோபி<br>III கே.ராஜா |
| 19 | Running Race<br>200 Metres (Boys)<br>21 to 30 years | I கே.கே. மோகன்குமார்<br>II எம். வினோத்குமார்<br>III எஸ். பாலாஜி |
| 20 | Running Race<br>100 Metres (Men)<br>31 to 40 years | I ஜெ.ஜி. அருண் ராஜா<br>II கே. அன்பழகன்<br>III எம். துரைசாமி |

| | | | |
|---|---|---|---|
| 21 | Running Race<br>100 Metres (Men)<br>41 to 50 years | I<br>II<br>III | பி. சேகர்<br>ஜி. மோகன்ராஜ்<br>ஆர். சிவசெல்வம் |
| 22 | Running Race<br>100 Metres (Men)<br>51 to 60 years | I<br>II<br>III | சதாசிவம்<br>எஸ். அன்பழகன்<br>ரவிச்சந்திரன் |
| 22 | Running Race<br>50 Metres (Men)<br>61 and Above | I<br>II<br>III<br>IV | ஏ. சிவசாமி<br>சிவமலை<br>அண்ணாமலை<br>செங்கோட்டுவேலு |
| 24 | Ball Throw (Girls)<br>III & IV Std. | I<br>II<br>III | ஐஸ்வர்யா<br>சூர்யா<br>கார்த்திகா |
| 25 | Ball Throw (Girls)<br>V & VI Std. | I<br>II<br>III | அபர்ணா<br>கீர்த்தனா<br>ஸ்ரீ அபிதா |
| 26 | Ball Throw (Girls)<br>VII & VIII Std. | I<br>II<br>III | நர்மதா பிரீதம்<br>உமாமகேஸ்வரி<br>தாழிணி சதாசிவம் |
| 27 | Ball Throw (Girls)<br>IX & X Std. | I<br>II<br>III | ஞான தீபிகா<br>வினிதா<br>சொருபா ஈஸ்வரன் |
| 28 | Ball Throw (Girls)<br>16 to 20 years | I<br>II<br>III | ஆர். செல்ல கிருத்திகா<br>யுவஸ்ரீ<br>பத்மபிரியா |
| 29 | Ball Throw (Girls)<br>21 to 30 years | I<br>II<br>III | ரோகினி<br>ஜோதி<br>இந்துமதி |
| 30 | Ball Throw (Women)<br>31 to 40 years | I<br>II<br>III | பிருந்தா<br>சீதா<br>சாவித்திரி |

| | | | |
|---|---|---|---|
| 31 | Ball Throw (Women)<br>41 to 50 years | I<br>II<br>III | கே. வசந்தி<br>கலைச்செல்வி<br>கே. ஜெயமணி |
| 32 | Ball Throw (Women)<br>51 to 60 years | I<br>II<br>III | மல்லிகா<br>சரோஜா<br>தமயந்தி |
| 33 | Ball Throw (Women)<br>61 and above | I<br>II<br>III | எஸ். சரோஜா<br>உத்தமி பொன்னுசாமி<br>பார்வதி |
| 34 | Lucky Corner (Ladies)<br>above 18 years | I<br>II<br>III | கல்பனா ராஜா<br>பிருந்தா<br>இந்துமதி |
| 35 | Running Race (Girls)<br>25 Metres<br>LKG & UKG | I<br>II<br>III<br>IV<br>V | தாரிகா<br>ஹரிணி<br>தன்வி<br>கீர்த்தனா<br>சுகிர்தா |
| 36 | Running Race (Girls)<br>25 Metres<br>I & IInd Std | I<br>II<br>III<br>IV<br>V | சஞ்சுத்தா ராஜா<br>அனுசா மயில்வாகனன்<br>லட்சிதா சுந்தர்<br>நிகிதா ராஜா<br>மிருதுலா திவ்ய பிரகாஷ் |
| 37 | Running Race (Girls)<br>50 Metres<br>III & IV Std | I<br>II<br>III | ஐஸ்வர்யா இளமுருகன்<br>கொற்றவைசிவை சரவணன்<br>இலக்கியா செல்வராஜ் |
| 38 | Running Race (Girls)<br>50 Metres<br>V & VI Std | I<br>II<br>III | லத்திகா மோகன்ராஜ்<br>கீர்த்தனா குமார்<br>அபர்ணா முத்துகுமார் |
| 39 | Running Race (Girls)<br>75 Metres<br>VII & VIII Std | I<br>II<br>III | நர்மதா பீரித்தம்<br>தர்ஷிணி சதாசிவம்<br>நிமிதா நவிக்குமார் |
| 40 | Running Race (Girls)<br>75 Metres<br>XI & X Std | I<br>II<br>III | வினிஷா<br>ஹரிணி<br>நிலாமாதுரி |

| | | | |
|---|---|---|---|
| 40 | Running Race (Girls)<br>100 Metres<br>16 & 20 years | I<br>II<br>III | எம்.வி. வாஷிரி<br>எஸ். பத்மபிரியா<br>ஆர்.செல்லகிருத்திகா |
| 41 | Running Race (Girls)<br>100 Metres<br>21 & 30 years | I<br>II<br>III | ரோஷினி<br>சத்யபிரியா<br>வி. தீபா |
| 42 | Running Race (Women)<br>100 Metres<br>31 & 40 years | I<br>II<br>III | சாவித்திரி<br>வசந்தி<br>கற்பகப்பிரியா |
| 43 | Running Race (Women)<br>100 Metres<br>41 to 50 years | I<br>II<br>III | சுமதி கிருஷ்ணமூர்த்தி<br>எம். கோகிலா<br>கே. ஜெயமனி |
| 44 | Running Race (Women)<br>100 Metres<br>51 to 60 years | I<br>II<br>III | பி. மல்லிகா<br>எஸ். செல்வராணி<br>எஸ். லட்சுமி |
| 45 | Running Race (Women)<br>100 Metres<br>61 and above | I<br>II<br>III | எஸ். சரோஜா<br>உத்தமி பொன்னுசாமி<br>எஸ். ஈஸ்வரி |

## கயிறு இழுக்கும் போட்டி

| WINNER | | RUNNER | |
|---|---|---|---|
| 1. | கே.எம்.சுப்பிரமணி | 1 | மோகன் |
| 2. | எம்.சண்முகம் | 2. | எஸ்.சரவணன் |
| 3. | ஆர்.சிவசெல்வம் | 3. | ஆர்.சுந்தர் |
| 4. | ஆர்.மயில்வாணன் | 4. | ஜெகதீஷ் |
| 5. | கே.அன்பழகன் | 5. | வி.முருகவேல் |
| 6. | சதாசிவம் | 6. | ஆர்.செல்வராஜ் |
| 7. | பி.பெரியசாமி | 7. | எஸ்.ராமைய்யா |
| 8. | பி.சிவா | 8. | எம்.சந்தோஷ் |
| 9. | எம்.சோமசுந்தரம் | 9. | பி.எம்.பாண்டியன் |
| 10. | கே.ராஜா | 10 | எம்.ராஜா |
| 11. | சர்வராஜன் | 11 | எஸ். யுதனேஷ் |
| 12. | இசை பாலு | 12 | அருள் |
| 13. | கலைமணி | 13 | பி.பரமேஷ்வரன் |
| 14. | எஸ்.நித்தியபிரகாஷ் | 14 | கே.எஸ்.அன்பழகன் |
| 15. | சி.செல்வராஜ் | 15 | எஸ்.சரவணன் |
| 16. | கே.கே.ரமேஷ் | 16 | சுபாஷ் |
| 17. | ஜி.மோகன்ராஜ் | 17 | எம்.துரைசாமி |
| 18. | சிவமலை | 18 | கே.கே.மோகன் |

# சென்னை கொங்கு நண்பர்கள் சங்கம்

17–07–2011 அன்று வெள்ளி விழா இல்லத்தில் நடந்த பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான போட்டிகளில் பரிசு பெற்றவர்களின் பட்டியல்

| வ.எண் | போட்டியின் பெயர் | பரிசு பெற்றோர்<br>I, II & III பரிசு |
|---|---|---|
| 1. | நடனப்போட்டி<br>5 – 10 வயது வரை | 1 லத்திகா மோகன் ராஜ்<br>2 கார்த்திகா ரவிக்குமார்<br>3 சங்கவிதா செந்தில்குமார் |
| 2. | 10வயது மேல் | 1 நிமிதா ரவிக்குமார்<br>2 ஹரிணி முருகேசன்<br>3 விஹாஷ் பாலசுப்பிரமணி |
| 3. | மாறுவேடப்போட்டி<br>3–5 வயது வரை | 1 சக்திவேல் சுப்பிரமணி<br>2 விஜய ராஜகோபாலன்<br>3 சபரிஷ் சதாசிவம்<br>3 ஹரிணி லெனின்குமார் |
| 4. | 6–10 வயது வரை | 1 கிருத்திகா ரவிக்குமார்<br>2 வேதிஹா சேகர்<br>3 ஸ்ரீ ரஜ்ஜினி பத்ரிநாதன் |
| 5. | 10 வயதிற்குமேல் | 1 நிமிதா ரவிக்குமார்<br>2 ஸ்ரீ அபிதா செந்தில்குமார்<br>3 ஸ்ரீ ரஞ்ஜினி பத்ரிநாதன் |
| **பாட்டுப்போட்டி** | | |
| 6. | 3–5 வயது வரை | 1 ஹரிணி லெனின் குமார்<br>2 விஜய ராஜகோபாலன்<br>3 சக்திவேல் சுப்ரமணி |
| 7. | 5–10 வயது வரை | 1 கார்த்திகா ரவிக்குமார்<br>2 லத்திகா மோகன்ராஜ்<br>3 நக்ஷசத்ர மோகன்ராஜ் |
| 8. | 10–15 வயது வரை | 1 ஹரிணி முருகேசன்<br>2 ஸ்ரீஅபிதா செந்தில்குமார்<br>3 நிமிதா ரவிக்குமார் |

**பேச்சுப்போட்டி**

1. 5 – 10 வயது வரை
   - 1 சர்வீஷ் சக்திவேல்
   - 2 நக்ஷசத்ர மோகன்ராஜ்

2. 10 – 15 வயது வரை
   - 1 நிலா மாதரி
   - 2 நிமித்தா ரவிக்குமார்
   - 3 ஸ்ரீஅபிதா செந்தில்குமார்

**கட்டுரை**

3. பள்ளி
   - 1 சி.எஸ்.ராஜா ஸ்ரீபதி
   - 2 அமுதினி கொங்குவேள்
   - 3 தர்ஷினி சதாசிவம்
   - 3 நிமிதா ரவிக்குமார்

4. கல்லூரி
   - 1 நா.மதுரா, கரூர்
   - 2 யாழினி கொங்குவேள்
   - 3 இந்துமதி சந்திரசேகரன்

**கவிதை**

கல்லூரி
- 1 யாழினி கொங்குவேள்
- 2 ஏ.லோகேஷ் ஆனந்த்

பள்ளி
- 2 சிவரஞ்சனி சண்முகம், பவானி,
- 2அமுதினி கொங்குவேள்,
- 2 தர்ஷினி சதாசிவம்
- 3. சிவ. கீர்த்தனா
- 3 ஜெ.செங்கிர்
- 3 கி.செல்வ விக்னேஷ்

**கோலப்போட்டி**
- 1 கீதா செந்தில்குமார்
- 1 தேன்மொழி இரவிச்சந்திரன்
- 2 சசிகலா சதாசிவன்
- 2 வசந்தி சேகர்
- 3 சித்ரா ரவிக்குமார்
- 3 சுகந்தி பெரியசாமி

**ஓவியப் போட்டி**

2 வயது
- 1 அக்க்ஷரா அருண்ராஜா

3 – 5 வரை
- 1 ஹரிணி லெனின் குமார்
- 2 சக்திவேல் சுப்ரமணி

| | |
|---|---|
| | 3 விஜயாராஜகோபாலன் |
| | 3 ஸ்ரீனிவாசபிரபு |
| | 3 ஹர்ஷிகா |
| 6–10 வயது | 1 விக்னேஷ் ரவிச்சந்திரன் |
| | 2 வேதிகா சேகர் |
| | 2 நக்ஷத்திரா அருண்ராஜா |
| | 3 சர்ஜிவி நித்தியபிரகாஷ் |
| | 3 சங்கவிதா செந்தில்குமார் |
| | 3 ஹரிணி ஸ்ரீராஜேந்திரன் |
| 10 வயதிற்கு மேல் | 1 நிமிதா ரவிக்குமார் |
| | 1 லத்திகா மோகன்ராஜ் |
| | 2 லத்திகா |
| | 3 ஹரிணி பெரியசாமி |
| | 3 ஸ்ரீஅபிதா செந்தில்குமார் |
| **ஆறுதல் பரிசு** | சபரிஷ் சதாசிவம் |
| | அதிஷ்முத்துசாமி |
| | லக்சிதா சுந்தர் |
| | ஹிர்திக் ரோஷன் சுபாஷ் |
| | மிருதிளா நித்தியபிரகாஷ் |
| | ஹரிருதுரர் ரவிச்சந்திரன் |
| | ஸ்ரீ அமோக ராஜவேல் |
| | திவ்ய தர்ஷினி சரவணன் |
| | ராகுல் கிஷோர் பெரியசாமி |
| | தர்ஷினி சதாசிவன் |
| | தீபிகா தங்கவேல் |
| | சதாரா திருமலைச்செல்வன் |

